# வேலையற்றபட்டதாரிகளுக்கு விரைவில் வேலை

★ ★

Registered as a News paper in Ceylon

விலை சதம் 15

# ஈழநாடு

EELANADU

மலர் 10

இதழ் 351

தபால்பெட்டி எண் : 49

போன்: 389

National Tamil Daily

தேசிய தினசரி

யாழ்ப்பாணம தை 16 ஜூல்க: 10 புதன்கிழமை (29-1-69)

## அரசாங்கம் தயாரித்துள்ள திட்டம்

கொழும்பு, புதன்

வேலையற்றிருக்கும் பட்ட தாரிகளுக்கு விரைவில்வேலை வழங்க அரசாங்கம் திட்ட மிட்டுள்ளது.

ஆசிரியர்கள் பற்றுக்குறை யாகஉள்ள பாடசாலைகளில் இவர்களை நியமிப்பதன் மூலம் இருபிரச்னைகளை சமா ளிக்கலாம் என அரசாங்கம் கருதியுள்ளது.

மாணவர்கள் அதிகமாக உள்ள பாடசாலைகளில் இத் தகைய பட்டதாரிகளை நிய மிக்கவும் அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

புதிதாக நியமிக்கப்படும் இந்தப் பட்டதாரி ஆசிரியர் களுக்கு இப்போதிருப்பதை விட குறைந்தசம்பளம்வழங் கவும் இந்த சம்பளத்தைக் கொண்டு இவர்கள் சமாளிக் கும் வகையில் தமது ஊர் களிலுள்ள பாடசாலைகளு க்கே இவர்களை ஆசிரியர் களாக நியமிக்கவும் அர சாங்கம் தீர்மானித்துள்ளது.

## அண்ணா உடல்நிலை

சென்னை ஜன. 28

தமிழக முதல் அமைச்சர் திரு. சி. என். அண்ணாதுரை யின் உடல்நிலை திருப்திகர மாக இருப்பதாகவும் அவர் அமைதியாகப் பொழுதைப் போக்கியதாகவும் தமிழக கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் ராஜ்யசபை சட்ட சபையில் தெரிவித் தார்.

நேற்றுமாலை அவரது மார் பில் சிறிது வலியேற்பட்ட

(8-ம் பக்கம்பார்க்க)

# பிரேமதாசாவுக்கு மகத்தான வரவேற்பு காத்திருக்கிறது

## 14 அதிகாரிகளுடன் இன்று பலாலியில் வந்திறங்குவார்

யாழ்ப்பாணம், புதன்

இன்று யாழ்ப்பாணத் துக்கு அமைச்சர் என்ற முறையில் முதல் தடவை யாக வருகைதரும் திரு. ஆர். பிரேமதாசாவுக்கு அமோக வரவேற்பு காத் திருக்கின்றது. அண்மைக் காலத்தில் யாழ்ப்பாணத் துக்குவருகை தந்த எந்த வொரு அமைச்சருக்கும் இப்படியான வரவேற்புக் கிடைத்திருக்காது என்று கருதப்படும் அளவுக்கு அமை ச்சரை வரவேற்பதற்கான ஏற்பாடுகள் பலஇடங்களி லும் செய்யப்பட்டுள் ளன.

வட பகுதிக்கு ஐந்துநாள் விஜயத்தை மேற் கொள் ளும் உள்ளூராட்சி அமைச் சர் திரு. பிரேமதாசாவும், அவருடன் வரும் 14 உள் ளூராட்சி அமைச்சுக் குழு வினரும் இன்று காலை 8-15 மணிக்கு அரச விமானப் படை விமானத்தில் பலாலி விமான நிலையத்தை வந்த டைவர்.

யாழ். மாவட்ட அரசா ங்க அதிபர் திரு. பிரான் சிஸ் சி. பீட்டர்ஸ், மேலதிக அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர், உள்ளூ ராட்சி உதவி ஆணையாளர் ஆட்சி மன்ற உறுப்பினர்கள் உள்ளூராட்சி மன்றத் தலைவ ர்கள் உட்பட பல பிரமுகர் கள் அமைச்சரை பலாலி விமான நிலையத்திற்கு சென்று வரவேற்பார்கள்.

ஐந்து நாள் விஜயத்திலும் 52 நிகழ்ச்சிகளில் கலப்து கொள்ளஇங்கு வரும் அமை ச்சருடன் அவரது நிரந்தரக் காரிய தரிசியானதிரு.எஸ். ஜி. குணவர்த்தன. ஸ்தல ஸ்தாபன உதவிஆணையா

(5-ம் பக்கம் பார்க்க)

2000 ஆண்டு பூர்த்தி

## வள்ளுவர் விழாவுக்கு 'திரு' தலைமையில் குழு

கெம்பனித்தெரு, செவ்.

திருவள்ளுவரின் 2000 ஆண்டு நிறைவை மிகவும் கோலாகலமான முறையில் கொண்டாடுவதற்காக முன் னாள் உள்ளூராட்சி அமைச்ச ரும் செனட்டருமான திரு. மு. திருச்செல்வம் தலைமையில் திருவள்ளுவர் 2000ஆண்டு நிறைவு விழாக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இக் குழுக் கூட்டத்தில் திருவள்ளுவர் விழாவில் சிறப்புச் சொற்பொழிவுகள் நிகழ்த்த தமிழகத்திலிருந்து நில அறிஞர்களை அழைப்ப தெனவும் முடிவுசெய்யப் பட்டது. திருவள்ளுவர்விழா குழுவின் புதிய உத்தியோ கத்தர்களாக தலைவர்: செனட்டர் மு. திருச்செல் வம், காரியதரிசி: திரு. கே. நாகலிங்கம் ஜே. பி. உத விக்காரியதரிசி: திரு, ஏ. எஸ். மணவைத்தம்பி, தனாதிகாரி: திரு, வி. சவிரி முத்து, நிர்வாகசபை உறுப் பினர்களாக திரு. ஆர். பாலசுப்பிரமணியம், திரு. எம். கே, அபூபக்கர், திரு. ஆதி கருப்பையா, திரு. ஜீ நாராயணசாமி, திரு. வி. ஏஸ். முருகன், திரு. டி. எஸ். பழனியப்பன் முத லானோர் தெரிவுசெய்யப் பட்டுள்ளனர்.

## மேயரும் அங்கத்தினரும் கோருவர்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குச் சொந்தமான மின்சாரநிலையக் காணியை, ஆஸ்பத்திரி வெளிநோயாளர் சிகிச்சைநிலையம் அமைக்க அரசாங்கம்சுவீகரித்ததால் அதற்கான நஷ்டஈடு மாநகர சபைக்குக்கொடுக்கப்படவேண்டும் என யாழ்ப்பாணம் வரும் உள்ளூர் ஆட்சி அமைச்சரை, யாழ்ப்பாண மாநகரசபையினர் கோரவிருக்கிறார்கள்.

நாளை மாலை 5 மணிக்கு யாழ். நகர மண்டபத்தில் உள்ளூராட்சி அமைச்சர் திரு. பிரேமதாசாவுடன், மாநகரசபை முதல்வரும், உறுப்பினர்களும் நடாத் தும் பேச்சுவார்த்தையில் இக் கோரிக்கையே மிக முக் கியமானதாக இருக்கும்.

அமைச்சரிடம் விடுக்க இருக்கும் கோரிக்கைகள் பற்றி ஆராய்வதற்கான கூட்டமொன்று நேற்றுசபை ஆலோசனை மண்டபத்தில் நடைபெற்றது. முதல்வர் திரு. சி. நாகராஜா தலைமை யில்நடைபெற்ற இக்கூட்டத் திற்கு சகல அங்கத்தவர் களும் அழைக்கப்பட்டிருந் தார்கள்.

மாநகரசபைக்குச் சொந்த மான மின்சார நிலையக் காணியை அரசாங்கம் சுவீ கரித்ததால், அதற்கான நஷ்டஈடு ...

((8-ம் பக்கம் பார்க்க)

குருநகர் தேவாலய சம்பவம்

## நால்வரின் கைவிரல் அடையாளம் பதிவு

யாழ்ப்பாணம், புதன்

நத்தார் திருநாள் நள்ளிர வில் யாழ்ப்பாணம் குருநகர் அர்ச் சந்தியோகுமையோர் தேவாலயத்தில் நடந்தசம்ப வங்கள்சம்பந்தமாக தொட ர்ந்து நடைபெற்றுவரும் பொலிசாரின் மாமூல் விசா ரணைகளில் ஒன்ருக அன்று சேதப்படுத்தப்பட்ட பொலிஸ் 'ஜீப்' வண்டியில் காணப்பட்ட கைவிரல் அடையாளங்கள் சம்பந்த மான ஆராய்ச்சி தொடர் ந்து நடைபெற்றுவருகின் றது. இந்த விசாரணைகளில் ஒன்ருக அந்தச் சம்பவத் தின்போது காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக் கப்பட்டிருந்த குருநகரைச் சேர்ந்த நால்வரின்கைவிரல் அடையாளங்களும் நேற்று முன்தினமிரவு மாஜிஸ் டிரேட் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டன,

அரசாங்கஊழியர்

## இடமாற்றத்தை ரத்து செய்ய உதவி நிதிஅமைச்சர் யோசனை

கொழும்பு, புதன்

அரசாங்க ஊழியர் இட மாற்றம்செய்யப்பட்டுவரும் முறையை ரத்துச் செய்ய வேண்டுமென நிதி உதவி அமைச்சர் திரு. எம். விமல சேன அரசாங்கத்துக்கு யோசனை கூறியுள்ளார்.

இந்த இடமாற்ற முறை யால் அரசாங்க ஊழியர் வீண் செலவுகளுக்குள்ளாக வேண்டியிருப்பதாகவும். வீணான சிரமங்களை அனுப விக்கவேண்டியிருப்பதாக வும் திரு. விமலசேன கரு த்து வெளியிட்டுள்ளார்.

அரசாங்க ஊழியர் தமது சொந்த ஊரிலேயே கடமை யாற்றுவதால் பல பிரச்னை களுக்கு தீர்வு காணலாம் என அவர் எடுத்துக்காட்டி யுள்ளார். அரசாங்க ஊழி யர்கள் எதிர்நோக்கும் பிரச் னைகள் குறித்து ஆராய நிய மிக்கப்பட்ட விசாரணைக் குழுவில் திரு. விமலசேன வும் ஒரு அங்கத்தவர் என் பது குறிப்பிடத்தக்கது.

## டாக்டர் கஷ்டம்

அல்லைப்பிட்டி, புதன்

வேலணை அரசினர் மருத் துவ மனையில் உள்ள தொலை பேசியை இயக்குவ தற்கு ஒருவர் இல்லாததி னல் டாக்டர் கஷ்டம

(8-ம் பக்கம் பார்க்க)

## மரண அறிவித்தல்

### கார்த்திகேசு முருகையா

சங்கானையைச் சேர்ந்த ஆயுள் வேத வைத்தியர் திரு. கார்த்திகேசு முருகையா அவர்கள் காலமானார். இவர் முத்துப்பிள்ளையின் அருமைக் கணவரும், திருமதி கந்தையா, திருமதி இராசரத்தினம் திரு. சுப்பிரமணியம் ஆசிரியர் ஆகியோரின் தந்தையும் காலம் சென்ற ஆயுள்வேத வைத்தியர் கந்தையா, வர்த்தக வியாபாரி ந. த. இராசரத்தினம், திரு. மதி சுப்பிரணியம் ஆகியோரின் மாமனாருமாவார். அன்னாரின் ஈமச்சடங்குகள் (29-1-69) புதன்கிழமை 10 மணியளவில் சங்கானை கரைச்சி மயானத்தில் நடைபெறும். இத்தகவலை உறவினர்களும் நண்பர் களும் தயவுசெய்து ஏற்றுக் கொள்ளவும்.

மு. சுப்பிரமணியம்.

1171

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

நம்பிக்கையான மலையாள மாயாஜால வசீகர பரிகாரத்தைக்கொண்டு காதல் பிரச்னைகள் 3 நாட்களில் பரிபூரணமாக தீர்த்து வைக்கப்படும். இருவர் பெயர்களையும் எழுத. இலவச விபரங்களுக்கு எழுதுங்கள். நீலன் கந்தசாமி, குபத வித்யாதணய, நிட்டம்புவ, 495

### விற்பனைக்கு

ஒலிபெருக்கிக்கும் சிறு வைபவங்களுக்கும் பாவிப்பதற்குரிய லைட் மெசின் விற்பனைக்கு உண்டு. ஏ. எஸ். அரசரட்ணம், ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 629

A - 40 C N 6710 விற்பனைக்குண்டு. க. சண்முகராசா, வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச்சபை (றீகல் படமாளிகைக்கு அருகாமையில்) 635

ஒஸ்ரின் A/40 சி. எல். 5595- பொடி திருத்தி, பெயின்ற் அடிக்கப்பட்டது. என்ஜின் இப்போது திருத்தப்பட்டு புதிய பிஸ்ரன் பொருத்தப்பட்டு நல்ல நிலையிலுள்ளது. யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதியிலுள்ள வின்ஸ்லோஸ் கராஜில் காலை 8-30 லிருந்து மாலை 5 மணி வரை பார்வையிடலாம். 636

### நன்றி நவிலல்

காலஞ் சென்ற அருமைத் தாயாரின் ஈமக்கிரியைகளில் சமுகமளித்தவர்கள் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்கள் வேறும் பல வித உதவி செய்தவர்கள் ஆகிய நண்பர்கள் உறவினர்கள் அனைவருக்கும் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ள இயலாதது பற்றி வருந்துகின்றோம். ச. இராசையா, ச. இராசரத்தினம், திருமதி நா. கந்தையா, இராஜன் மில்ஸ், புன்னாலைக்கட்டுவன். 637

MANOHARA
JAFFNA
Daily at 4-45, 7-00, & 9-45 p. m.
Pre Poya Poya 10-30 a. m.
Jack Mahoney
in
CALIFORNIA

31-ந் திகதி வரை
இணுவில்
ஸ்ரீ காலிங்கன்
தினசரி 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30
முத்துராமன் - பாரதி
நடித்த
தெய்வச் செயல்

மானிப்பாய்
வெஸ்லி சினிமா
தினசரி 3 காட்சிகள் மாலை 2-30, 6-30, 9-30 மணி
ஜெய்சங்கர் - கே. ஆர். விஜயா
மற்றும் பலர் நடித்த
பொன்னான வாழ்வு
யாழ் நகரில் திரையிடப்படாத புத்தம் புதிய வெளியீடு!

2-வது வாரம்
கிங்ஸ்லி ராஜ் (நீர்கொழும்பு)
பிளாஸா விஜயா (மட்டுநகர்)
மக்கள்திலகம் எம்.ஜி.ஆர் ★ நடிகையர்திலகம் சாவித்திரி
எம். ஆர். ராதா, நாகேஷ்,
மற்றும் பலர் நடித்த
கௌரி பிக்சர்ஸ்
பரிசு
டைரக்ஷன் யோகானந்
இசை கே. வி. மகாதேவன்

வெலிங்டன் யாழ் நகர்
தினசரி 2-30, 6-30, 9-30 மணிக்கு
எஸ். எஸ். ஆர், தேவிகா
நடித்த
மு. கருணாநிதியின்
மறக்க முடியுமா!
(சிலதினங்களுக்கு மட்டும்)

நாளை முதல்
எம். ஜி. ஆர். — பானுமதி
நடித்த
அலிபாபாவும் 40 திருடர்களும்


# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
## புதன் 29—1—69

(செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

344 மீ. அன் 61 மீ.

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 8-00 இசை வேளை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீ. அன் 49 மீ.

பகல் 12-00 சித்திர கானம், 1-00 மாதர்கேட்டவை.

344 மீ. அன் 61 மீ.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 கானமஞ்சரி.

இரவு 6-15 பாட்டு, 6-45 பா வளம், 7-00 கிராம சஞ்சிகை, 7-30 விவாத மேடை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசைக்கச்சேரி.

# எதிரிகள் சுப்ரீம் கோட்டுக்கு

வல்வெட்டித்துறை செவ்.

கரவெட்டி மேற்கைச் சேர்ந்த கணபதி கந்தன், கந்தன் இராசரத்தினம், கந்தன் செல்வராசா ஆகிய மூவரும் அதே இடத்தைச் சேர்ந்த மாணிக்கம் சிவரத்தினம் என்பவருக்கு கடந்த வருடம் ஆடிமாதம் 26-ந் திகதி கைக்குண்டு வீசி காலில் படுகாயம் உண்டு பண்ணியதாக பொலிசாரால் குற்றம் சாட்டிதொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின் பின்னர் மாஜிஸ்திரேட் எதிரிகளை சுப்ரீம் கோட்டிற்கு பாரப்படுத்தியுள்ளார்.

# மாணவரும் ச. ச. நிலையமும்

அல்லைப்பிட்டி, செவ்.

''மாணவர்கள் உண்மையான கல்வி அறிவைப் பெறுவதாயின் பாடசாலையில் இருந்தும், சன சமூக நிலையத்திலிருந்துமே பெற முடியும்.'' என்று வேலணை கலைமகள் ஜன சமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்ற கூட்ட மொன்றில் பேசும் போது இளைப்பாறிய தலைமை ஆசிரியர் அ. செல்லையா குறிப்பிட்டார். இக் கூட்டத்தில் மேற்படி நிலையத் தலைவர் வி. எஸ். கனகரத்தினம் பேசுகையில் ''இந் நிலையம் வேலணைப் பகுத மக்களுக்கு மட்டுமல்லாமல் தீவுப்பகுதி முழுவதற்குமே சேவைகள் புரிந்துள்ளது'' என்றார் ஆசிரியர்கள். பொ. நடராசா, ச. மாணிக்கவாசகர் உட்பட பலரும் பேசினர்.


2-வது வாரம்!
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
மற்றும் பலர் நடித்த
ஒளி விளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)
(எஸ். ரி. ஆர். வெளியீடு)

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி - சரோஜாதேவி
நடித்த
என் தம்பி


# இந்தியாவின் கடந்த ஆண்டு உற்பத்தி 25,69 கே டி

வெள்ளவத்தை, செவ்.

1968ம் ஆண்டில் இந்தியாவில் 12,162 கோடி தொன் நிலக்கரியும், 339 கோடி தொன் பழுப்பு நிலக்கரியும், 2,124 தொன் இரும்பும், 113 கோடி தொன் களிக்கல் (ஜிப்சமும்), 6 கோடி தொன் செம்பு (கொப்பர்), 38 கோடி தொன் லிமனைட் (சுண்ணக்கல்), 22 கோடி தொன் மங்கனீஸ் என்பனவும் பெறப்பட்டதாம்.

1968ல் இந்திய நாட்டின் மொத்த உற்பத்தி 25,690 கோடி ரூபாய். ஏற்றுமதி 1,100 கோடி ரூபாய். மருந்துச் சரக்குகள் ஏற்றுமதி 550 கோடி ரூபாய்.

மேற்படி புள்ளி விபரங்களைத் தற்போது வெள்ளவத்தை இராமகிருஷ்ண ரோட்டில் நடைபெறும் இந்திய கைத்தொழிற் பொருட்காட்சியின் நிர்வாக டைரக்டர் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

குளியாப்பிட்டிக்கு

# பலாலி கனிஷ்ட பல்கலைக்கழக மாணவர்

காங்கேசன்துறை, புதன்

குளியாப்பிட்டியாவில் நாளை பிரதமர் டட்லி சேனநாயக்கா திறந்து வைக்கும் கனிஷ்ட பல்கலைக்கழகத்திற்கு பலாலி கனிஷ்ட பல்கலைக்கழக மாணவர் செல்வதற்கென மூன்று பஸ்களை அரசாங்கம் ஒழுங்குசெய்துள்ளது.

பலாலி கனிஷ்ட பல்கலைக்கழக மாணவர்கள் விரிவுரையாளர்கள் ஆகியோர் இங்கிருந்து இன்று குளியாப்பிட்டிக்குப் புறப்படுகிறார்கள். அங்கு நாளைக் காலை 8-11 மணி வரை வேலை அனுபவ முகாமிலும் 4 மணிக்கு ஆரம்ப விழாவிலும் கலந்துகொண்டபின் 31-ம் திகதி காலை புறப்பட்டு பலாலியை வந்தடைவர்.

# 'தன்னலமற்ற சேவையாற்ற வேண்டு'

புத்தூர், செவ்.

'தன்னலமற்ற இனப்பற்றற்ற நேர்மையுள்ள சேவைசெய்ய வேண்டும்.' புத்தூர் குருநாதர்கோவில் புத்தூர் கிழக்குப் பகுதியில் கிராமசேவகராகக் கடமையாற்றி மாற்றலாகிச்செல்லும் திரு. ச. வேலாயுதம் பிள்ளைக்கு அளிக்கப்பட்ட பிரிவுபசார விழாவில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றிய வழக்கறிஞர் ச. லோகேஸ்வரன் 'மேற்கண்டவாறு சேவையை அரசாங்க உத்தியோகத்தர்கள் நல்க முன்வரவேண்டும்' என்று கூறினார்.

அவர் தொடாந்து பேசும் போதுமேற்கூறியமூன்றும் சங்கலையும்விட, மாற்றலாகிச் செல்லும் கிராமசேவகரில் சமாதானத்தை நிலைநாட்டும் சாதுரியமும் இருந்ததென்றும் கூறினார்.'

இப்பிரிவுபசார விழாவுக்கு ஆசிரியர் திரு. பொ. சிவகுருநாதன் தலைமை வகித்தார்.

# பரிசு பெற்றனர்

யாழ்ப்பாணம், புதன்

வண்ணை வைத்தீஸ்வரன் பஜனைச் சபை நடத்திய சமய அறிவுப் போட்டியில் செல்வி பி. திலகவதி தங்கப்பதக்கமும், ரி. தம்பு, எம். சண்முகநாதன் ஆகியோர் வெள்ளிப் பதக்கங்களும் பெற்றனர். மேற்படி சபை நடத்திய பஜனையில் கலந்து கொண்டவர்களுள் செல்வன் ஆர். சிவானந்தன் தங்கப்பதக்கமும், செல்வன் ரி. கோணையா குத்துவிளக்கும், செல்வி அன்னலட்சுமி வெள்ளிப் பதக்கமும் பரிசாகப் பெற்றனர். வேறுபலரும் பரிசுகள் பெற்றனர்.


## உங்களுக்கும் அதிர்ஷ்டம் உண்டா?
## பாஷன் பேணிஷிங் பலெஸ்

ஸ்தாபனத்தாரின்

மலிவு விற்பனை பரிசுத்திட்டத்தின் முடிவுகள் பின்வருமாறு:-

| | | இலக்கம் |
|---|---|---|
| 1-ம் பரிசு | 750/- | 99 |
| 2-ம் பரிசு | 500/- | 600 |
| 3-ம் பரிசு | 250/- | 1095 |

தலா 50 - கொண்ட 40 பரிசுகளின் இலக்கங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 44 | 1511 | 100 | 431 | 1950 | 1738 |
| 19 | 636 | 1541 | 1675 | 1997 | 1733 |
| 513 | 1890 | 1601 | 36 | 1703 | 47 |
| 1584 | 1700 | 973 | 1701 | 43 | 1520 |
| 1775 | 41 | 1980 | 1735 | 1651 | 611 |
| 1667 | 1734 | 34 | 1863 | 8 | 1535 |
| 38 | 1902 | 1888 | 1678 | | |

தலா ரூபா 25 - கொண்ட 20 ஆறுதல் பரிசுகளின் இலக்கங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1065 | 621 | 1921 | 1513 | 15 |
| 49 | 367 | 1911 | 1843 | 1599 |
| 7 | 1837 | 1575 | 1695 | 22 |
| 1637 | 1507 | 1611 | 50 | 975 |

அதிஷ்டசாலிகள் தங்கள் பரிசுகளை 5-2-69 பின் வந்து பெற்றுச் செல்லலாம். 1170

வின்ஸர் — றீகல்
ஆகிய இருதிரைகளிலும்
இப்பொழுது நடைபெறுகிறது
தினசரி 4 காட்சிகள்
வின்ஸர் காட்சி நேரங்கள் காலை 10-00, பிற்பகல் 2-00, 6-00, 9-00.
றீகல் காட்சி நேரங்கள் காலை 10-30, பிற்பகல் 2-30, 6-30, 9-30.
★ எம். ஜி. ஆர். ★ ஜெயலலிதா
நாகேஷ், நம்பியார், ராஜஸ்ரீ நடித்த
G. N. வேலுமணி அளிக்கும்
குடியிருந்த கோயில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்கு ஆசியத் தீர்வுக்கு புதிய முயற்சி மேற்கொள்வோம்

## அமெரிக்க அதிபர் கூறுகிறார்

வாஷிங்டன், ஜன. 28

''மேற்காசியாவில் புதிய சண்டை ஏற்பட்டால் அது அணு ஆயுத வல்லரசுகளுக்கிடையிலான பெரும் யுத்தமாகவே மாறக்கூடியதாக இருக்கும்'' என்று அமெரிக்காவின் புதிய ஜனதிபதியான திரு. ரிச்சார்ட் நிக்ஸன் ஜனதிபதியாகப் பதவியேற்றபின் நேற்று முதல் தடவையாக நடத்திய பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் தெரிவித்தார்.

மேற்காசியப் பிரச்னைக்கு ஒரு நல்ல தீர்வு காண்பதற்கு அமெரிக்காவுக்குப் புதிய முயற்சியும், புதிய தலைமையும் தேவைப்படுகிறதென்றும் திரு. நிக்ஸன் கூறினார். தமது உயர் ஆலோசகர்களுடன் சனிக்கிழமை தாம் ஆலோசனை நடத்தப் போவதாகவும் அவர் சொன்னார். இப்பிரச்னைகள் சம்பந்தமாகத் தாம் மேற்கொள்ளவிருக்கும் புதிய கொள்கைகள் திட்டங்கள் பற்றி திரு. நிக்ஸன் எதையும் வெளியிடவில்லை.

வியட்நாம் பிரச்னை சம்பந்தமாக திரு. நிக்ஸன் பேசுகையில் அங்கு போர் நிறுத்தம் நடைமுறைச் சாத்தியமில்லையென்றும், அங்கு நடைபெறுவது முறையான போர் அல்லவென்றும், கொரில்லா யுத்தமென்றும் தெரிவித்தார். வியட்நாமில் அமைதி ஏற்படுவதற்குக் காலக்கெடு விதிக்கமுடியாதென்றும் அவர் சொன்னார்.

## ஈராக் தூக்குத்தண்டனை பற்றி யு தாண்ட் கவலை

நியுயோர்க், ஜன. 28

இஸ்ரேலுக்காக உளவு வேலைகளில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டின்மீது ஒன்பது யூதர்கள் உட்பட பதினன்கு பேருக்கு ஈராக் இராணுவநீதிமன்றம் மரண தண்டனை விதித்து, அத்தண்டனை நேற்றுபதினன்கு பேருக்கு நிறைவேற்றப்பட்டதும் ஒருவரின் தண்டனை நிறுத்தி வைக்கப்பட்டது பற்றியும், ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் அதிர்ச்சியும் கவலையும் தெரிவித்தார். இது, நிலைமையை மேலும் மோசமாக்குமென்றும் அவர் அச்சம் தெரிவித்தார்.

அமெரிக்காவின் புதிய வெளிவிவகார அமைச்சர் திரு. ரோஜர்ஸும் ஈராக்கில் யூதர்கள் உட்படப் பதினன்கு பேர் தூக்கிலிடப்பட்டதைக் கண்டித்தார்.

இஸ்ரேலியப் பிரதமர் எஸ்கோல் நேற்று இஸ்ரேல் ஆட்சிமன்றத்தில் பேசுகையில் இதுபோன்ற கொலை நடவடிக்கைகள் இனியும் நடைபெருதவாறு தடுக்கும்படி உலக அரசுகளுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

## கோவா போராட்ட வீரர் விடுதலை

கல்கத்தா, ஜன. 28

பதின்மூன்று ஆண்டுகள் சிறையிலிருந்த கோவா விடுதலைப் போராட்ட வீரர் திரு. மோகன் ரானடே இம்மாதம் 26-ம் திகதி போர்ச்சுக்கல் அரசாங்கத்தால் விடுதலைசெய்யப்பட்டு இப்பொழுது இந்தியாவரும் வழியில் ரோம் நகர் வந்திருக்கிருர்.

இந்தியா வந்து சேரும் பொழுது அவருக்கு மகத்தான வரவேற்பளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

உரிமைக் கமிட்டிக்கு

## துணை சபாநாயகர் அறிவிப்பு

சென்னை, ஜன. 28

'சபையிலிருந்து வெளிநடப்புச் செய்தமை, சட்டமன்ற விதிகளை மீறுவதாகும்.' இவ்வாறு தமிழக சட்டசபை துணைச் சபாநாயகர் புலவர் கோவிந்தன் உரிமைக் கமிட்டிக்கு மகஜர் ஒன்றை அனுப்பியிருக்கிருர்

கீழ்வெண்மணியில் 42 பேர் உயிருடன் எரியூட்டப்பட்ட நிகழ்ச்சியைப் பற்றி சபையில் எழுந்த ஒரு பிரச்னை காரணமாகவே கடந்த 25ந் திகதி எதிர்க்கட்சியைச் சேர்ந்த 15 அங்கத்தவர்கள் வெளிநடப்புச் செய்தனர். இதற்கான நடவடிக்கை எடுக்கும்படியே துணைச் சபாநாயகர் உரிமைக் கமிட்டிக்கு அறிவித்துள்ளார்.

## நீவின்-அயூப் பேச்சு

ராவல்பிண்டி, ஜன. 28

பாகிஸ்தானுக்கு விஜயம் செய்துள்ள பர்மா புரட்சிச் சபைத் தலைவர் ஜெனரல் நீவின் இன்று ராவல்பிண்டியில் பாகிஸ்தான் அதிபர் பீல்ட் மார்ஷல் அயூப்கானுடன் இரு நாடுகளுக்கும் பொதுவான விஷயங்கள் பற்றிப் பேசினர்.

சங்கானை பட்டினசபை

## அங்கத்தவர் கிளப்பிய பிரச்னை: கூட்டம் நடக்கவில்லை

சங்கானை, செவ்வாய்

சங்கானைப் பட்டினசபையின் முதலாவது மாதாந்தக் கூட்டம் குறிப்பிட்டபடி இம்மாதம் 27ந் திகதி நடைபெறவில்லை. 7 அங்கத்தவர்கள் வந்திருந்த போதும் 1ம் வட்டார உறுப்பினர் எழுப்பியகூட்ட ஒழுங்குப் பிரச்னை காரணமாகக் கூட்டத்தை நடத்த முடியாதெனத் தலைவர் தெரிவித்தார்.

பட்டினசபைச் சட்ட 24ம் பிரிவின்படி, மாதாந்தக் கூட்டங்களை எப்பொழுது நடாத்தவேண்டுமென சபை ஏற்கனவே தீர்மானிக்கத் தவறியபடியால்தான் கூட்டம் நடைபெறவில்லை. இக்கூட்டம் நடைபெருததையடுத்து விசேஷ கூட்டம் ஒன்றை இம்மாதம் 30ந் திகதி நடத்துவதற்கு பட்டின சபைத் தலைவர் அறிவித்தல் கொடுத்துள்ளார்.

## ''வேறுபாடுகளைக் களையவேண்டும்''

வெள்ளவத்தை, திங்கள்

''ஆத்மீகத் துறைகளில் உலகத்திற்கு நன்மைசெய்ய விரும்புபவர்கள் முதலில் தங்கள் மத்தியிலுள்ள வேறுபாடுகளையும் சுயநலக் கொள்கைகளையும் ஏமாற்றும் தன்மைகளையும் களையவேண்டும். அப்போதுதான் அவர்களது தூயநடத்தை மூலம் மற்றவர்களும் அவர்கள் போதிக்கும் கொள்கைகளைப் பின்பற்ற விரும்புவார்கள்.''

இவ்வாறு இலங்கை வந்துள்ள உலக பஹாய் இயக்கத்தூதுவர் டாக்டர் பிராங்கி கொழும்பு ஹாவ்லொக் வீதியில் நடைபெற்ற பஹாய்கள் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

பாரசீகத்திலிருந்து வந்த இவர் இலங்கையில் தங்கும் சில நாட்களுக்கு பஹாய் அன்பர்களைச் சந்தித்து உரையாடுவார். யாழ்ப்பாணம், திருகோணமலை, கண்டி ஆகிய பகுதிகளுக்கும் இவர் விஜயம் செய்யவிருக்கிருர். இதற்கான ஏற்பாடுகளை தேசிய ஆத்மீகசபை (என். எஸ். ஏ.) செய்துள்ளது.

## ''கல்வி மந்திரிக்கு கடமைப்பட்டவர்கள்''

சங்கானை, செவ்.

''தமிழ் பேசும் மக்களுக்காக நவீன முறையில் அமைக்கப்பட்ட இராமநாதன் பல்கலைக்கழகம் தொழில் முறைகளுக்கு வழிவகுக்கும் நோக்கத்துடன் அமைக்கப் பட்டதையிட்டு நாம் கௌரவ கல்வி மந்திரிக்கு கடமைப் பட்டுள்ளவர்களாவோம்.''

இவ்வாறு பலாலி கனிஷ்ட பல்கலைக்கழக அதிபர் திரு. எஸ், கந்தசாமி மாணவர்கள் மத்தியில் பேசுகையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில் ''எதிர் காலத்தில் மாணவர்கள் நல்ல பெயர் பெற வேண்டுமானல் எமக்குச் சொந்தமான பண்பு, கலாச்சாரம், ஒழுக்கம் போன்றவற்றை நிலைநாட்டி இலங்கையில் உள்ள மற்றைய பல்கலைக்கழகங்களுக்கு முன்மாதிரியாக விளங்க வழிவகுப்பது மாணவர்களாகிய உங்கள் கடமை'' என்ருர். மற்றும் உபதலைவர் திரு. கே. சிவபாலன் திரு. அழகக்கோன் ஆகியோர் பேசினர்.

## ஆட்டுக்களவில் அகப்பட்ட இருவர் பிணையில் விடுதலை

குரும்பசிட்டி, செவ்.

நான்கு ஆடுகள் திருட்டுப் போனதாக ஏழாலையைச் சேர்ந்த வேலுப்பிள்ளை இராசையா என்ற நபர் சுன்னுகம் பொலிசில் புகார் செய்ததையடுத்து விசாரணை நடாத்திய பொலிசார் சந்தேகத்தின் பேரில் கந்தசாமி, சின்னத்தம்பி ஆகிய இருவரைக் கைதுசெய்தனர். களவுபோன ஆடுகளும் இந்த நபர்களிடமிருந்துமீட்கப்பட்டன. மல்லாகம் நீதிமன்றத்தில் பொலிசாரால் ஆஜர் செய்யப்பட்ட இரு சந்தேகநபாகளையும் தலா ரூபா 500 பிணையில்செல்ல அனுமதித்து மீண்டும் அடுத்த மாதம் 3-ம் திகதி ஆஜராகும்படி மாஜிஸ்டிரேட் திரு. எம். சண்முகலிங்கம் உத்தரவிட்டார்.

## இன்றைய பலன்

புதன்கிழமை

(29-1-69)

தை மாதம், 16 உ

திதி- ஏகாதசி, பகல் 12-11-ன் மேல் துவாதசி.

நட்சத்திரம்- மிருகசீரிடம்.

ராகுகாலம்- 12-36— 2-06.

சுபநேரம்- 5-06— 6-36.

இன்று பிறந்தவர்களுக்கு—தனமுடையோருக்கு இவ்வாண்டு நல்லாண்டாகும். பொருள் வரவு, புண்ணிய விருப்பும் புத்திரர் வாழ்வில் புகழுண்டு. காதல் வாழ்வில் களிப்பு மிகுதியும் கைத்தொழில் விருத்தி, கண்ணியம் சேரும். வேலையில் ஆர்வம் குருதொழில் புரிவோர்க்கு சிறப்பான ஆண்டாகும்.

மேஷம்- கவலையின் ரேகை கனக்கும் நெஞ்சம்.

ரிஷபம்- குடும்பத் தொல்லை ஏகாந்தநிலை.

மிதுனம்- கற்றதால் பயன் கடவுள் நம்பிக்கை.

கடகம்- உள்வீட்டுப் புயல் உபத்திரவ மிகுதி.

சிம்மம்- அன்னையின் ஆணை அமைதிக்கு வழி.

கன்னி- இன்பம் பொங்கும் இனசன மகிழ்ச்சி.

துலாம்- வேவுகனை தொடுப்பர் விழிப்புடன் இரு.

விருச்சிகம்- துளிர்விடும் காதல் ஒளிவிடும் வாழ்வு.

தனுசு- சிநேகிதர் பகை சிந்தனைக்கிலேசம்.

மகரம்- கனிவான நினைவு கண்ணியம் சேரும்.

கும்பம்- தொழில் பெருமை துன்பம்மடியும்.

மீனம்- நிமிர்ந்த நடை நிலையான வரவு.

சோதிடக்கலாநிதி

திருமலை வேலுப்பிள்ளை

பாகிஸ்தானில் கலகம்

# தீவைப்பு, கல்வீச்சு; ஆர்ப்பாட்டம் நீடிப்பு

## பொலிஸ்சுட்டதில் மேலும் 11 பேர் பலி

கராச்சி, ஜன. 23

அயூப்கான் அரசாங்கத்துக்கெதிரான கிளர்ச்சிகள் கிழக்குப் பாகிஸ்தானிலும் மேற்குப் பாகிஸ்தானிலும் நான்காவது தினமாக நேற்றும் தொடர்ந்து நடைபெற்றன. நேற்று நடைபெற்ற பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகங்களில் பதினெரு பேர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்.

லாகூரில் அரசாங்கத்துக்கு ஆதரவான பத்திரிகைக் காரியாலயம் ஒன்றுக்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் தீவைக்க முயன்றபோது அவர்களைக் கலைப்பதற்காகப் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதில் நான்கு பேர் கொல்லப்பட்டனர். இச்சம்பவத்தைத் தொடர்ந்து லாகூரில் 24 மணிநேர ஊரடங்கு உத்தரவுபிறப்பிக்கப்பட்டுள்ளது. கராச்சியில் ஊரடங்கு உத்தரவை மீறிய ஆர்ப்பாட்டக்காரர்கள்பொலிசாரைத் தாக்கத் தொடங்கியதுடன் தேசீய சபை அங்கத்தவர் ஒருவரின் வீட்டையும் தாக்கி அதற்குத் தீ வைக்கவும் முயன்றனர். மூன்று மாடிக் கட்டிடம் ஒன்றையும் அவர்கள் தாக்கினர். இச்சம்பவங்களைத் தொடர்ந்து நிலைமையைச் சமாளிப்பதற்காக இராணுவம் அழைக்கப்பட்டது. இப்போது இப்பகுதியில் 48 மணி நேர ஊரடங்கு உத்தரவுபிறப்பிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகங்களைக் கண்டித்தும் ஜனநாயக அரசியல் அமைப்பை மீண்டும் ஏற்படுத்த வேண்டுமென்று கோரியும் மூவாயிரத்துக்குமதிகமான மக்கள் நேற்று ராவல்பிண்டியில் கறுப்புக்கொடிகளுடன் ஊர்வலம் நடத்தினர்.

கிழக்குப் பாகிஸ்தானில் கோலிபூர் என்னுமிடத்தில் ஆர்ப்பாட்டக்காரருக்கும், பொலிசாருக்குமிடையில் நேற்று ஏற்பட்ட கைகலப்பைத் தொடர்ந்து பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் ஒருவர் கொல்லப்பட்டார். பலர் காயமடைந்தனர். டாக்கா, நாராயண்கஞ்ச் ஆகிய இடங்களிலும் ஊரடங்கு உத்தரவை மீறி ஆர்ப்பாட்டங்கள் நிகழ்ந்தன. இப்பகுதிகளில் மேலும் 24 மணி நேரத்துக்கு ஊரடங்கு உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது.

கராச்சியில்மட்டும் நேற்று 800 பேர் கைது செய்யப்பட்டனர். மற்றும் நகரங்களிலும் பலர் கைதுசெய்யப்பட்டனர்.

டாக்காவில்தேசீய அசெம்பிளியின் நேற்றைய கூட்டத்தின்போது பொலிஸ் துப்பாக்கிப் பிரயோக சம்பவங்கள் பற்றி விவாதிக்கப்பட வேண்டுமென எதிர்க்கட்சி உறுப்பினர் வற்புறுத்திய போது ஆளும் கட்சி உறுப்பினருக்கும் அவர்களுக்கும் இடையில் காரசாரமான வாக்குவாதம் எழுந்தது. நிலைமையைச் சமாளிப்பதற்காக சபையின் கூட்டத்தை சபாநாயகர் காலவரையின்றி ஒத்திவைத்தார். மேற்குப் பாகிஸ்தான் சட்டசபையிலும் இது [illegible] நிகழ்ந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

ஆணுயிலும்சரி, பெண்ணுயிலும்சரி பாடுபட்டு உழைக்க உடலில் சக்தியுள்ளவர்கள் அனைவருமே கட்டாயம் உழைக்க வேண்டும். உழைக்காதவர்களுக்கு நாம் எப்படி உணவு அளிக்க முடியும். அவர்களுக்கு உணவைக்கேட்க உரிமை தான் ஏது.

—மகாத்மாகாந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389,

யாழ்ப்பாணம், கீலக வருஷம் தை மாதம் 16-ந் திகதி
( 29 - 1 - 69 )


## அமைச்சரின் விஜயம்

உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா இன்று யாழ்ப்பாணம் வருகிறார். அமைச்சராகப் பதவியேற்ற பின் அவர்இங்கு வருவதுஇதுவேமுதல்தடவை.வடபகுதியில்ஐந்து தினங்கள் தங்கி பல இடங்களுக்கும் சென்று அந்தந்தப் பகுதி மக்களின் குறைகளை அறிந்து ஆராய்ந்து அவற்றை நீக்கும் நோக்கத்துடன் தமது அமைச்சைச் சேர்ந்த பதினன்கு அதிகாரிகளுடன் அமைச்சர் வருகிறார். செயல்வீரரான அவருக்கு இங்கு பல இடங்களிலும் உற்சாகமான வரவேற்புக் காத்திருக்கிறது. 'வருக, வருக' என நாமும் அவரை வரவேற்கிறோம்,

சாதாரண மக்களுடன் நெருங்கிப் பழகி அவர்களின் கஷ்டநஷ்டங்களை நன்கறிந்திருக்கும் அமைச்சர்களில் திரு. பிரேமதாசா ஒருவர். கொழும்பு மாநகரசபையில் நீண்டகால அங்கத்தவராகவும் உதவி மேயராகவும் இருந்ததுடன் கொழும்பு நகர மேயராகவும் பதவிவகித்து மாநகரசபையின் நிர்வாகத்தைச் சீராக நடத்திப் பெயர் பெற்றவர். சேரி வாழ் மக்களுக்குப் பெருமளவு நன்மைகள் புரிந்தவர். கொழும்பு நகரில் செக்கடித்தெரு, வாழைத்தோட்டம், கொம்பனித்தெரு, புறக்கோட்டை ஆகிய இடங்களில் பொதுமக்களுக்குப் பெருந் தொல்லையையும் எளிய குடும்பங்களுக்குப் பெரும் கஷ்டத்தையும் கொடுத்துவந்த கள்ளுத் தவறணைகளை மூடி பலரின் பாராட்டைப் பெற்றவர் அமைச்சர் பிரேமதாசா. இங்கும் மரவரி முறையினால் உள்ள கேடுகளை அவர் அறிந்து அவற்றைக் களைய முன்வந்து முயற்சி செய்ய வேண்டும்.

உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகத்தையும் அவைகளின் குறைநிறைகளையும் மக்களின் கஷ்டநஷ்டங்களையும் நன்கு அறிந்துள்ள அமைச்சர், பலவகையிலும் புறக்கணிக்கப்பட்டுவந்துள்ள இந்நாட்டின் ஒரு பகுதியான வடக்கு மாகாணத்துக்கு வருவது இப்பகுதி மக்களின் குறைகள் பெரிதும் நீங்க உதவுமென்று நம்பலாம். குடிதண்ணீர் கஷ்டம், மின்சார விநியோகப் பற்றுக்குறை, வீதிச்சீர்கேடு, போக்குவரத்துக் கஷ்டம் மற்றும் இப்பகுதியில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்து வளமும், வனப்பும் உள்ள பகுதிகளையும் உல்லாசப் பிரயாணிகளைக் கவரக்கூடிய முறையில் விருத்தி செய்ய முன்வராமலிருப்பது போன்றவைகளை அமைச்சர்நேரில் அறிந்து கொள்ளவும் இக்குறைகளைநீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவும் அவரது இந்த விஜயம்பயன்பட வேண்டும். உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள், அங்கத்தவர்கள், நமது பிரதிநிதிகள் இக்குறைகளை அவருக்குத் தகுந்த முறையில் எடுத்துக்காட்ட வேண்டும்.

## சீனவும் நிக்ஸனும்

கம்யூனிஸ்ட் சீன தனது கொள்கைகளிலும் போக்கிலும் மாறுதல் செய்து கொள்ளாதவரை ஐ. நா.வில் சீனவுக்கு அங்கத்துவமளிப்பதை அமெரிக்கா தொடர்ந்து எதிர்த்துவரும் என்று அமெரிக்காவின் புதிய ஜனதிபதி திரு ரிச்சார்ட் நிக்ஸன், வெள்ளைமாளிகையில் அவர் நடத்திய முதலாவது பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் கூறியிருக்கிறார். ஜனதிபதியாகப் பதவியேற்றுக் கொண்டதும் "பகைமையை ஒழித்து உலக அமைதிக்காக ஒன்றுபடுவோம் வாரீர்" என்று அவர் விடுத்த அழைப்பைக் கேட்டு அகமகிழ்ந்தவர்களுக்கெல்லாம் திரு. நிக்ஸனின் இந்தக் கூற்று "பழைய பாட்டைத்தான்" என்றசலிப்பையும் அவரிடம் அதிகம் எதிர்பார்த்தவர்களுக்கெல்லாம் அவநம்பிக்கையையும் கொடுப்பதாக இருக்கிறது.

உலக அரங்கான ஐ. நா. ஸ்தாபனத்தையோ, அதன் சாஸனத்தையோ சீன மதிக்கவில்லையென்று திரு. நிக்ஸன் கூறுவது உண்மையாக இருக்கலாம். தாய் தந்தைக்குக் கட்டுப்படாத பிள்ளையை, கட்டுப்படுத்தி வழிக்குக்கொண்டு வர முயற்சி செய்யாமல், தன்னிஷ்டப்படி திரிவதற்கு அனுமதியளிக்க முடியுமா? அப்படி விடுவதன்மூலம் அந்தப் பிள்ளையும் கெட்டு, குடும்பமும் கெட்டு, சமுதாயமும் கெட்டுவிடுமே! ஐ. நா. ஸ்தாபனத்தையோ, அதன் சாஸனத்தையோ சீன மதிக்கவில்லையென்ற காரணத்துக்காக நூறுகோடி மக்கள் வாழும் அந்த நாட்டுக்கு ஐ. நா.வில் அங்கத்துவமளிக்க மப்பது, அந்த நாடு மேலும்மேலும்எந்த உலக அமைப்பையும் மதிக்காமல் வன்முறைக் கொள்கையைப் பின்பற்றத் தூண்டுவதாகவே இருக்கும்.

ஐ. நா. ஸ்தாபனம் உலக அரங்கமானல் வேறு எந்த நாடுகளையும்விட மிகப்பெரிய பெருந்தொகையான மக்களைக் கொண்ட நவசீனவுக்கு அங்கு அங்கத்துவமில்லையென்று சொல்வதற்கு எத்தகைய நியாயமுமிருக்க முடியாது. சீனவை ஐ. நா.வில் சேர்க்க முடியாது என்று கூறுவதற்கு அமெரிக்காவுக்கு என்ன உரிமை? சீன சம்பந்தமாக திரு. நிக்ஸன் நிர்வாகம் புதிய நோக்கில் நடந்து கொள்வதும், சீனவும் தனது வன்முறைக் கொள்கையைச் சிறிது தளர்த்தி ஐ. நா.வுக்கும் அதன் சாஸனத்துக்கும் உரிய மதிப்பளிப்பதும் உலக அமைதிக்கு அவசியம்.

பலாலி கனிஷ்ட பல்கலைக்கழகம்

## 120 மாணவர் அனுமதிபெற்றனர்

காங்கேசன்துறை, செவ். பலாலி கனிஷ்ட பல்கலைக் கழகத்தில் 120 பேர் இம் மாதம் 26ந் திகதி அனுமதிக்கப்பட்டனர்.

பலாலி அரசினர் ஆசிரிய பயிற்சிக் கல்லூரி அதிபர் திரு. கந்தசாமி கனிஷ்ட பல்கலைக் கழகத்தின் அதிபராகப் பொறுப்பேற்றார். பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரிக்கும் திரு. கந்தசாமியே தற்காலிக அதிபராகக் கடமையாற்றி வருகின்றார்.

புதிய மாணவர்களைப் பதிவுசெய்து வைத்திய பரிசோதனையும்நடைபெற்றது. 27ந் திகதி காலை நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அதிபர், உப-அதிபர், விரிவுரையாளர்கள் அறிமுகஞ் செய்துவைக்கப்பட்டனர். கல்லூரி வசதிகள், வகுப்பு நேர சூசிகள், குளியாப்பிட்டியாவில் ஆரம்பிக்கும் கனிஷ்ட பல்கலைக் கழகத்தின் விழாவைப் பற்றிய தகவல்களும் வெளியிடப்பட்டன. பெண்களுக்கு அச்சுவேலி சென். திரேசா கொன்வென்ற் தற்காலிக விடுதிச்சாலையாக அமையும்.

இக்கனிஷ்ட பல்கலைக் கழகத்திற்கு வேண்டிய புத்தகங்கள், உபகரணங்கள் எல்லாம் வந்து சேர்ந்துள்ளன.

## "இராமநாதன் பல்கலைக்கழக நிறுவவேண்டும்"

அளவெட்டி, செவ்வாய் "வடமாகாணத்தில் இராமநாதன் பல்கலைக்கழகம் நிறுவவேண்டும்" என சைவ அனுட்டான பாதுகாப்புச்சபை அரசாங்கத்தை கோரியுள்ளது.

அகில இலங்கை சைவ அனுட்டான பாதுகாப்புச் சபையின் விசேட கூட்டம் ஒன்று நேற்று கீரிமலைசிவன் கோவில் மண்டபத்தில் சபைத்தலைவர் திரு. த. சிவலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

இலங்கையிலே கொழும்பில் பௌத்த குருமார்களுக்கும், அங்குள்ள மாணவர்களுக்கும் ஒரு பல்கலைக்கழகம் நிறுவப்பட்டுள்ளது. இதேபோல் இன்னும் பல சிங்கள பகுதிகளில் பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டன. ஆனல் சைவசமய குருமார்களும், சைவசமயப் பிள்ளைகளும் பயிலுவதற்கு வடக்குமாகாணத்தில் ஒரு பல்கலைக்கழகமும் இல்லை. எனவே அரசாங்கம் சேர். பொன். இராமநாதன் பல்கலைக்கழகத்தை வடமாகாணத்தில் நிறுவவேண்டும். என அரசாங்கத்திடம் கோருதல்.

கீரிமலைக்கு விஜயம் செய்யும் உள்ளூராட்சி அமைச்சரிடம் ஒருமகஜரை சமர்ப்பித்தல் உட்படமற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

அடம்பனில்

## வேலை அனுபவ தினம்

அடம்பன், செவ்வாய் கடந்த 22-ம் 23-ந் திகதிகளில் அடம்பன் மகாவித்தியாலயத்தில் நடந்த வேலை அனுபவதின நிகழ்ச்சிகளில் 250க்கு மேற்பட்ட மாணவர்களும் ஆசிரியர்களும் உற்சாகத்துடன் ஈடுபட்டனர்.

பாடசாலை இளைஞர் விவசாயக்கழக உறுப்பினர்களால் 1 ஏக்கர் நிலம் குறிப்பிட்ட தினத்தில் பயிர்ச்செய்கைக்குள்ளாக்கப்பட்டதோடு விளையாட்டு நிலமும் துப்பரவாக்கப்பட்டது. பாடசாலைச் சாரணர்களால் அமைக்கப்பட்ட சைக்கிள் ஷெட் 250 ரூபாவை மீதப்படுத்தியுள்ளதாகமதிப்பிடப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபர் திரு. வி. அரியநாயகம் வேலை முடிவில் நடந்த வைபவத்தில் பேசுகையில், "வேலை அனுபவத்தின் உண்மையான நோக்கம் இன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. நமது சாதனை வெற்றிகரமானது. நம் நாட்டின் பொருளாதார விருத்திக்கு இயன்ற அளவு நாம் பயன்பட்டுள்ளதை எண்ணி மகிழ்ச்சி அடையவேண்டும்" என்று குறிப்பிட்டார்.

ப. ச. தூதுக்குழு

## சுகாதார அமைச்சரை பேட்டி காணும்

காங்கேசன்துறை, செவ் காங்கேசன்துறைப் பட்டினசபை எல்லைக்குள் இருக்கும் காங்கேசன்துறை அரசினர் ஆஸ்பத்திரி தெல்லிப்பழைக்கு இடம் மாறுவதால் இங்கு வெளிநோயாளர் சிகிச்சை நிலையம் ஒன்றும் 10 கட்டில்களைக் கொண்ட ஒரு வைத்திய நிலையமும் இருக்கவேண்டுமென்றும் சுகாதார அமைச்சரை தூதுக்குழு ஒன்று நேரில் பேட்டி காண வேண்டுமெனக் கோரும் தீர்மானம் ஒன்றை காங்கேசன்துறைப் பட்டினசபை அங்கத்தவர் திரு. இம்மானுவேல் பிரேரிக்க 4-ம் வட்டார அங்கத்தவர் திரு. சு. வே. சீனிவாசகம் அனுமதிக்க பிரேரணை ஏகமனதாக நிறைவேறியது.

இதைத் தொடர்ந்து பட்டினசபைத் தலைவர், 4-ம் வட்டார அங்கத்தவர் திரு. சு. வே. சீனிவாசகம், காங்கேசன்துறைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் ஆகியோரைக் கொண்ட குழு ஒன்று சுகாதார அமைச்சரை நேரில் சந்தித்துப் பேசவிருக்கிறது.

## இடமாற்றங்கள்

காங்கேசன்துறை, செவ். காங்கேசன்துறைப்பட்டின சபையில் இலிகிதராக கடமையாற்றிய திரு. மாணிக்க மயில்வாகனம் அடுத்த மாதம் 3-ம் திகதியிலிருந்து யாழ்ப்பாண மாநகரசபை [illegible] யிலிருந்து எஸ். கருணநந்தனும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

0 0 0

தெல்லிப்பழைக் காரியாதிகாரி கந்தோரில் பிரதம லிகிதராக கடமையாற்றும் திரு. சிவசுப்பிரமணிய ஐயர் அடுத்த மாதத்திலிருந்து யாழ்ப்பாணம் கச்சேரி [illegible]ணிப் பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## கோப்பாய் செய்திகள்

### சிவராத்திரி விழா

கோப்பாய் வீரபத்திர சுவாமி கோவிலில் சிவராத்திரி விழாவை சிறப்பாக கொண்டாட ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. பகல் நவோத்திரசத சங்காபிஷேகமும், இரவு முழுவதும் பஜனை, சமயச் சொற்பொழிவுகள், சங்கீத கதாப்பிரசங்கங்களும் நடைபெறும்.

0 0 0

### கி. ச. கட்டிட விஸ்தரிப்பு

கோப்பாய் கிராமசபைக் கட்டிட விஸ்தரிப்புக்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இதற்கான பணம் அரசினரிடமிருந்து கிடைத்ததும் வேலை ஆரம்பிக்கப்படும்.

0 0 0

### வீதிதிருத்த ரூ. 8000

கோப்பாய் வடக்கு கண்ணகை அம்மன் கோவில் ஒழுங்கை கோப்பாய் கிராமசபையால் திருத்தம் செய்யப்படவுள்ளது. இதற்கென ரூபா 8,000 உள்ளூராட்சி அமைச்சரிடமிருந்து பெற்றுள்ளது இதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

0 0 0

### கலைவிழா

கோப்பாய் திருவருள்தவநெறி மன்றத்தின் நிதிவளர்ச்சிக்கென கலைவிழாவொன்றை நடாத்த தீர்மானித்துள்ளனர். இவ்விழா ஆகஸ்டில் நடைபெறும்.

0 0 0

### மின்விளக்கு எரிவதில்லை

இப்பகுதித் தெருவோரங்களிலுள்ள மின்விளக்குகள் பல இரவில் எரிவதில்லையாம். முக்கிய சந்திகளில் உள்ள விளக்குகளே தொடர்ந்து சில சமயம் இந்நிலைக்குள்ளாகின்றன. பொதுமக்கள் இரவு நேரத்தில் போக்குவரத்துச்செய்ய மிகவும் கஷ்டமடைகின்றனர்.

0 0 0

### அமைச்சரை வரவேற்பர்

இம்மாதம் 31-ம் திகதி கோப்பாய் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை யால் அளிக்கவிருக்கும் தேநீர் விருந்துபசாரத்தில் கலந்து கொள்ள வரும் உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசாவை கோப்பாய் நாவலடி சனசமூக நிலையத்தினரும் கௌரவிக்கவுள்ளனர்.

0 0 0

### மின்சார உதவியுடன் விவசாயம்

மிக விரைவில்கோப்பாய்ப் பகுதி விவசாயிகள் மின்சாரத்தால் பயனடையப்போகிறார்கள் மின்சார. உதவியுடன் விவசாயம் செய்வதற்கு தேவையான சகல ஏற்பாடுகளையும் செய்வதற்கு இப்பகுதிக் கிராமசபை முன்வந்துள்ளது. இத்தகவலை கோப்பாய் கிராமசபை அங்கத்தவர் ஒருவர் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

## முதலிடம்

கொழும்புத்துறை, செவ். யாழ்ப்பாணம சனசமூக நிலையங்களின் சமாஜ விழாப் பேச்சுப் போட்டியில் கொழும்புத்துறை சசசமூக நிலயத்தைச் சேர்ந்த செல்வன் க. அரியநாயகம் முதலிடத்தைப் பெற்றிருக்கிறார். 'மதுவா? மானமா?' என்னும் தலைப்பில் அவர் பேசினர்.



## சரி[...]

யாழ். மாவட்டத்[...]
தன்னகத்தேகொ[...]
வரலாறு மிகமிக[...]
முறையில் பாவி[...]
வருகிறது. இந்த[...]
லிப்பளைக் கிராம[...]
நகர்த் திட்டத்தி[...]

### அன்றைய நிலை[...]

யாழ். மாவட்[...]
வடபாகத்தில் 1[...]
தூரத்தில் அமைந்த[...]
கீரிமலை. புண்ணிய[...]
களையும், புண்ணிய[...]
தங்களையும் தன்[...]
கொண்டுள்ள நம[...]
டிற்குக் கீரிமலை[...]
தனிப் புகழுண்டு.[...]
தலம், தீர்த்தம்[...]
மூன்று விசேஷங்[...]
தன்னகத்தே கெ[...]
சங்கமசாகர தீர்[...]
யில் [...]ள்ளதும்,[...]
தன், நளன், அ[...]
முதலான சக்க[...]
களால் அர்ச்சிக்க[...]
தெனப் போற்றப[...]
புண்ணிய ஸ்தலத்தி[...]
லாம்பிகாசமேத [...]
வரப்பெருமான்
கொண்டு எழுந்தரு[...]
கின்றார்.

கீரிமலைச் சாரலி[...]
லிற் சங்கமமாகும்[...]
தீர்த்தம் ஒன்றுண்[...]
விசேஷ தன்மை[...]

### புரட்சி நடிகர்[...]

(6-ம் பக்கத் தொ[...]
களிடம் காணப்பட்[...]
நாங்களும் அந்த[...]
தரிசன வரிசையில்[...]
நின்று கொண்டோ[...]
நேர[...]ில்
வந்[...] பிரிந்து [...]
பர் ஒருவர்' என[...]
வந்தார் வரிசையி[...]
பிரிந்து தன்னுடன்[...]
படி அவர் எங்க[...]
லாம் அழைத்தார்.[...]
ளும் வெளியே வந்[...]
ஆவலுடன் நான்[...]
டம் "இப்போது[...]
போகிறோம்" என்[...]
டேன்.
"உள்ளே சென்று[...]
கியவர் நமக்கு[...]
யேகமான அனுமதி[...]
த்து விட்டது. வ[...]
காத்திருக்க வே[...]
தலைக்குஇரண்டுரூபா[...]
ஒருவரிடம் கொடுத்[...]
பாடு செய்து விட்[...]
என்றார் அந்த நண்[...]
என் உள்ளத்தில் [...]
பெரிய கேள்வியை[...]
விட்டது.
ஏழுமலையானைத் [...]
செய்ய வந்திருக்கு[...]
மான இடத்தில் இப்[...]
முறையற்ற செயல[...]
கேள்வியும், 'தெய்[...]
தரிசிக்க லஞ்சமா'[...]
வேதனையும் என் [...]
தைப் போக்க[...]
விட்டன. அப்படிய[...]
தெய்வத்தைத்
வேண்டுமா?
எனக்குஅது பிடிக்[...]
என் மனம் அதற்[...]
தர மறுத்து விட்டது[...]
அன்றுதான் நான்[...]
சியாகக் கோவி[...]
போனது. அதன்பிற[...]
கோவிலுக்குச் [...]
கிடையாது. ஆனல்[...]
வம் என்று ஒன்று[...]
கிறது என்பதை நா[...]
பவனக எண்ணி[...]
கூடாது.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# த்திரப் புகழ்மிக்க கீரிமலை தீர்த்தம்

--- எஸ். ஆர். ஞானசுந்தரம் ---

ட்டத்தின் வட பாகத்தில் சாகரசங்கம புண்ணிய தீர்த்த ஸ்தலத்தை
கொண்டு பெருமையுடன் விளங்குகிறது கீரிமலை. இக்கீரிமலையின்
கமிகப் பழமை வாய்ந்தது. அப்பழமையான நகரத்தை நல்ல
பாவிக்காததால் இன்று அப்பழைய தன்மை கெட்டு உருக்குலைந்து
இந்த நிலையை மீண்டும் நல்ல நிலைக்குக் கொண்டுவரவே தெல்
ரோமசபை, நவீன நகராக்கும் திட்டத்தை வகுத்தது. இந்நவீன
டத்தில், முதல் அங்கமான இளைப்பாறு மண்டபம் உள்ளூராட்சி
அமைச்சரால் திறக்கப்படவிருக்கிறது

## நிலை

ாவட்டத்தின்
12 மைல்
மைந்துள்ளது,
ணிய ஸ்தலங்
ணிய தீர்த்
தன்னகத்தே
நமது நாட்
லை நகரால்
டு. மூர்த்தி,
தம் ஆகிய
சஷங்களையும்
கொண்டு
தீர்த்தக்கரை
ம், முசுகுந்
அர்ச்சுனன்
சக்கரவர்த்தி
ச்சிக்கப்பட்ட
றப்படும் இப்
லத்தில் ஸ்ரீ நகு
த நகுலேஸ்
ன் கோயில்
ந்தருளியிருக்

ரலிலே கட
கும் நந்நீர்த்
றுண்டு. இத்
மை வாய்ந்

தது. கீரிமலைத் தீர்த்தத்தின் பெருமையே சிறப்புடையது. பூர்வீகச் குடிகளான நாகர்கள் வாழ்ந்த காரணத்தால் நாகதுவீபம் எனப் பெயர் பெற்ற இங்கு, நகுலம் என இப்புண்ணிய ஸ்தலம் போற்றப்பட்டதென்பர். இங்குள்ள புண்ணிய தீர்த்தம் மேற்குப்பாகத்தே தெற்குத் திசையிலிருந்து ஊறுகின்ற சுத்த சலமும், வடக்கில் உள்ள உப்புச் சலமும் கலந்து கிழக்கே நோக்கிய சிவரூபமும், சக்தி ரூபமும் சேர்ந்ததுபோல் இயல்புடையதாய் இருப்பது ஒரு தனிச் சிறப்பேயாகும்.

ஜமதக்கினி என்னும் தவ சிரேஷ்டர் தமது தந்தையாரின் சிராார்த்தத்தைத் தமது குலகுருவான பிருகு முனிவரிடம் செய்யும்படி கேட்டார். சிராார்த்தத்தன்று வியாசமாமுனிவரும் ஜமதக்கினி இல்லம் சென்றார். வியாசர் உயர்குருயாரைக்கொண்டு கரும மாற்றுவதென்று தெரியாமல் ஜமதக்கினி திகைப்புற்றார். காலம் கடந்துசெல்வதனை அவதானித்த பிருகு முனிவர் தாமதத்தின் காரணம் அறியவேண்டி கீரி வடிவில் வந்து உணவை எச்சிற்படுத்திச் சென்றார். கீரி முகமுடையவனுய் அலைவாயென்றும் சபித்தார். பிதிரர் வந்தபோது உணவு எச்சிற்படுத்தப்பட்டிருப்பதைக் கண்டு ஆத்திரம் கொண்டார். குலமில்லாது போகக் கடவது என்று சாபமிட்டனர். விபரமறிந்து கொண்ட ஜமதக்கினி பிருகு முனிவரைச் சரணடைந்து சாப நிவர்த்தியை மார்க்கம் கேட்டார். ஜமதக்கினியின் நிலைகண்டு பிருகுமுனிவர் மனமிரங்கினார். இலங்கையின் வடபால் திருத்தம் பலேச்சரத்தில் உள்ள புண்ணிய தீர்த்தத்தில் 'நீராடி, சிவ வழிபாடு செய்யின் சாபம் நிவர்த்தியாகும் என்றார்.

கீரி முகமுடையவரான ஜமதக்கினி தமது சாப விமோசனத்தால் இங்கு தங்கி நீராடி நகுலேஸ்வரப் பெருமானை வழிபட்டு உய்ந்தார். இதிலிருந்துதான் கீரிமுகம் மாறப்பட்ட இடமாகையால் இது நகுல கிரி என வழங்கப்படலாயிற்று

பிதிர்ச்சாபம் மாறிய புனித இடமாக கீரிமலை இருப்பதனால் இன்றும் பிதிர்க்கடன்கள் இத்தீர்த்த கரையோரம் நிறைவேற்றப் படுவதுகண்கூடு. பிதிர்க்கடன் நிறைவேற்ற சிறந்த தினமான ஆடி அமாவாசையிலேயே இப்பிதிர்க்கடன்கள் கீரிமலையில் செய்யப்பட்டுவருவது வழக்கமாகிவிட்டது.

நகுலகிரி என அழைக்கப்பட்ட கீரிமலை நாளடைவில் ''கீரிமலை'' என்றே வழங்கப்படலாயிற்று இன்றும் அதே பெயர் தான்நிலைத்துள்ளது.

எது எவ்வாறு இருப்பினும் கீரிமலையில் புராதனமாக புண்ணிய தீர்த்தம் ஒன்றுண்டு என்பதனை அனைவரும் ஒப்புக் கொள்கின்றனர். இன்றும் இத்தீர்த்தத்தின் பெருமையை நாம் உணரக் கூடியதான செயல்களும் நிகழ்ச்சிகளும் நடைபெற்று வருவது கண்கூடு.

கீரிமலையில் தற்போது காணப்படும் சிறப்புக்களே பண்டையநாளில் அதுபெற்றிருந்த சிறப்புகளை விளக்க போதுமானது. இருப்பினும் இன்று நாம் தீர்த்தமாடும் இடத்துக்கும், முன்புதீர்த்தமாடிய இடத்துக்கும் இடையே மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஆனாலும் இங்கு பழையகால பன்னீர் மரங்களும் உள. கல் ஆலும் உண்டு.

மலையடிவாரத்தில் பாதாளகங்கை உண்டு. அது சேது சமுத்திர தீர்த்தம் என போற்றப்படும். இதனை நல்ல முறையில் [illegible] யாக அமைத்துள்ளார்கள். இதில் சிறப்பான [illegible]மும் உண்டு. அருகேகடல் நீர் முழு உப்புத்தன்மையுடன் இருக்கையில் இக் கங்கையில் காணப்படும் நீர் உப்புத்தன்மை அற்று காணப்படுவதுடன் எவ்வளவுதான் எடுத்தாலும் சற்றும் குறையாது, அந்த அளவிலேயே இருக்கும்.

### இன்றைய நிலை

கீரிமலைமிகமிகப் பழைமையுடையதென மேற்படி சான்றுகள்மூலம்அறியலாம். ஆனால் முன்பு ஒப்பாரும் மிக்காரும் இன்றி இலங்கையின் சிகரமாக விளங்கிய கீரிமலை இன்று உருக்குலைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையை முன்போல உயர்த்தவே 'நவீன நகர்த்திட்டம்' என்ற பெயரில் ஒரு திட்டத்தை வகுத்துள்ளது.

---

டிகர்

(தொடர்ச்சி)
ப்பட்டன.
அந்த தர்ம
சயில் போய்
டோம். சற்று
களுடன்
ன நண்
எங்களிடம்
திசையிலிருந்து
டன் வரும்
எங்களையெல்
தார். நாங்க
வந்தோம்.
நான் அவரி
பாது எங்கே
என்று கேட்

சன்று வணங்
த பிரத்தி
னுமதி கிடை
வரிசையில்
வேண்டாம்.
ருபாய்வீதம்
காடுத்து ஏற்
விட்டேன்..''
நண்பர்.
தில் இது ஒரு
ியை எழுப்பி

னத் தரிசனம்
நிக்கும் புனித
ல் இப்படி ஒரு
சயலா என்ற
'தெய்வத்தை
சமா' என்ற
என் நெஞ்சத்
பாக்களமாக்கி
ப்படியாகிலும்
தரிசிக்க

பிடிக்கவில்லை;
அதற்கு இடம்
ட்டது.
நான் கடை
கோவிலுக்குப்
ன்பிறகு நான்
சென்றது
ஆனால் தெய்
ஒன்று இருக்
தை நான்மறுப்
ன ணி வி ட க்

## ஆண்டுவிழா

யாழ்ப்பாணம், புதன்

வண்ணை சைவ இளைஞர் மன்றத்தின் 3-வது ஆண்டு விழா வண்ணார்பண்ணை பன்றிக்குட்டிப்பிள்ளையார் ஆலயத்தில் கொண்டாடப்பட்டது. விழாவுக்கு திரு. ஆர். வன்னியசூரியர் தலைமை வகித்தார். கே. பி. கோதண்டபாணி குழுவினரின் மங்கள இசையுடன் விழா ஆரம்பமானது. பலர் உரையாற்றினர். விழா தொடக்கத்தில் நால்வர் படமும், மேற்படி தேவஸ்தான வித்துவான் பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மாவும் சாந்தையர்மடம் பிள்ளையார் கோவிலிலிருந்து பன்றிக்கோட்டுக்கு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

## 'கலைவாணர்..

6-ம் பக்கத் தொடர்ச்சி) பொருத்தமான கலைஞர் இவர்!

கார்மோனியம்: இசையுலகு நன்கறிந்த ஈழநல்லூர் எஸ். எம். சோமசுந்தரம். மிருதங்கம்: இனிய நாதத்தை எழுப்புவதில் வல்லவரான என். தங்கம். விற்கடம்: ஈழத்து கலைத்தாய் பெற்றெடுத்த செல்வங்களில் ஒன்றான ஏகாம்பரநாதன். உடுக்கிசை: கைவந்த கலைஞர் எஸ். நடராசா. நகைச்சுவை: ஈழத்து நாடகஉலகம் நன்கறிந்த இரா பற்குணமும் எஸ். ரி. அரசுவும்.

சிந்தனைக்கும் கருத்துக்கும் நல்ல விருந்தளிக்கப் போகும் கலைவாணர் வில்லிசைக்குழுவினரின் வில்லிசைக்குஈழத்தில் நல்ல வரவேற்புக்கிடைக்கும் என்று நம்பலாம்.

— பாமா

---

கொம்பனித்தெரு கொலை

## பொலிஸ் விசாரணையில் ஒருவர் கைது

கொம்பனித்தெரு, செவ்.

கொம்பனித்தெரு இ. போ. ச. ஊழியர் செ. செல்வராசாவின் கொலைசம்பந்தமாக ஐஸ்டின் என்பவர் கைதுசெய்யப்பட்டிருக்கிறார். கடந்த 25-ம் திகதி இரவு செல்வராசா கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து பொலிசார் புலன் விசாரணையில் ஈடுபட்டனர். அவர்களது விசாரணையில் பல புதிய விஷயங்கள் தெரியவந்துள்ளன.

கொலை நடந்த அன்று இரவு செல்வராசா, ஐஸ்டின் உட்பட மொத்தம் ஆறு பேர் ஒன்றாக செல்வராசாவின் வீட்டிலிருந்து மது அருந்தினார்களாம். அதற்கு முதல்நாள் செல்வராசாவின் வீட்டில் புகுந்த சிலர் வெளியேற்றப்பட்டார்கள் என்றும் அத்துடன் அவ்வீட்டில் ஆறு ஆண்டுகளுக்கு முன் குடியிருந்தவர்கள் சிலர் அண்மையில் வெளியேற்றப்பட்டிருந்தனரென்றும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

---

ஸ்ரீஸ்கந்தராசா

## மறைவுக்கு கல்லூரி அஞ்சலி

பாவற்குளம், செவ்.

பாவற்குளம் மகா வித்தியாலயத்தில் மறைந்தபெரியார் ஸ்ரீஸ்கந்தராசாவின் ஞாபகத்திற்காக நடைபெற்ற விசேஷ கூட்டத்தில் பல பிரமுகர்கள்கலந்து கொண்டனர். மன்றப் பொறுப்பாளர் எஸ். ஜே. சூசை ரெத்தினம் தலைமை வகித்தார்.

கல்லூரி அதிபர் திரு. கா. லோகசிங்கம் பேசுகையில்:-

'நீதியை பலரும்போற்றும் வண்ணம் கையாண்டது மட்டுமல்லாமல் சைவத்தையும் தமிழையும் இருகண்களாகப் போற்றியவர் அவர். அவர் மறைவு ஈழத்துக்குப் பெருநஷ்டமாகும். நாவலர் பணியை தொடர்ந்து நடத்தியும் அவருக்கு சிலை அமைக்க எடுத்த முயற்சியையும் நாம்மறக்கமுடியாது' என்று கூறினார்.

அதனைத்தொடர்ந்து கனிஷ்டபிரிவு அதிபர் திரு. எம் வஸ்தியாம்பிள்ளை, செல்வி [illegible] எலிசபெத் அதியாரும் பேசினர்.

---

## 'காந்தியின் போதனையையும் பின்பற்ற வேண்டும்'

மல்லாவி, செவ்வாய்

''தனது குடும்பத்திற்கான தேவைகளை தனது குடும்பத்தில் உள்ளவர்களே செய்ய முன்வரவேண்டும், இதையே மகாத்மாகாந்தி அடிகள் கூறினார்கள். அவரின் நூற்றாண்டு விழாவை உலகெங்கும் கொண்டாடினால் போதாது. அவரின் போதனைகளையும் பின்பற்ற வேண்டும். இதுதான் கிராம அபிவிருத்தி இயக்கத்தின் நோக்கங்களுமாகும். இந் நோக்கத்திற்காகவே அரசாங்கமும் சிறு குடிசைக் கைத்தொழிலுக்கான பயிற்சிவகுப்புகளை நடாத்துகின்றது. இவ்வகுப்புக்களை மக்கள் நல்ல முறையில் பயன்படுத்த முன்வரவேண்டும்.''

இவ்வாறு யோகபுரம் 1-ம் பகுதி பாரதி கிராம முன்னேற்றச்சங்க மண்டபத்தில் நடைபெற்ற தையல் பயிற்சி வகுப்பை ஆரம்பித்து வைத்த துணுக்காய் கிராம அபிவிருத்தி அதிகாரி கூறினார். இக்கூட்டத்தில் துணுக்காய்ப்பிரிவு கிராமமுன்னேற்றச் சங்கங்களின் செயலாளர் திரு. கு. சிவஞானசண்முகம், தையல் போதனாசிரியர் திருமதி ப. கிட்டப்பா, கிராமசபை உறுப்பினர் திரு. வே. கனகலிங்கம், திருமதி பு. நடராசா ஆசிரியை, பாரதி கி. மு. ச. தலைவர் திரு. சி. வேலுப்பிள்ளை உட்படப் பலர் உரை நிகழ்த்தினார்கள்.

---

## பிரேமதாசாவுக்கு..

(1-ம் பக்கத் தொடர்ச்சி) ளர் திரு. எஸ். டபிள்யூ. குணவர்த்தன, நீர்விநியோக வடிகால் அமைப்பு அதிபர் திரு ஆர். வி. பெருமையினர், கிராம, பட்டினஅபிவிருத்தி திட்ட அதிகாரி திரு. நெவில் குணரத்ன, உள்ளூராட்சி சேவை கமிஷனர் திரு. நிஸங்கா விஜயவர்த்தன, உள்ளூராட்சி அமைச்சின் சிரேஷ்ட உதவிக் காரியதரிசி திரு. டபிள்யூ. பத்மநாதன், உள்ளூராட்சி சேவை டெபியூட்டி கமிஷனர் திரு. எஸ். டபிள்யூ குணவர்த்தன, நீர்விநியோக வடிகால் அமைப்பு இலாகா சிரேஷ்ட என்ஜினியர் திரு. எம். ரன்டுனியா, நீர் விநியோக சிரேஷ்ட என்ஜினியர் திரு. எஸ். டி. பீரிஸ்: உள்ளூராட்சி சேவை உதவி கமிஷனர் திரு. கே. ஏ. சில்வா, நீர்விநியோக வடிகால் அமைப்பு இலாகாஎன்ஜினியர் திரு. ஓ. ஜே. ஜே. வாட்சன், உள்ளூராட்சி சேவை அமைச்சரின்மெய்ப்பாது காவலர் திரு. எல். வீரசேகரா, ஜனப் பிரதிநிதிகள் சபை மொழிபெயர்ப்பாளர் திரு. எஸ். ரி. தம்பிப்பிள்ளை பொதுஜன தொடர்பு அதிகாரி திரு. ஜய ஸ்ரீ பெரேரா ஆகியோரும் வருகின்றனர்.

---

# இன்றைய நிகழ்ச்சிகள்

அமைச்சர் பிரேமதாசா யாழ்ப்பாணத்தில் இன்று கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகள்:-

காலை 8.15 மணி: பலாலி விமான நிலையத்தை அமைச்சர் வந்தடைவார்.

8. 20 மணி: உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களுக்கும், பிராந்தியத் திணைக்களகங்களின் தலைவர்களுக்கும் அமைச்சர் அறிமுகம் செய்து வைக்கப்படுதல்.


9. 15 மணி: யாழ். நகர நுழைவாயிலான திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரிச் சந்தியில் யாழ். நகர முதல்வராலும், அங்கத்தவர்களினாலும்அமைச்சர் வரவேற்கப்படுதல்.

9. 40 மணி சமய வழிபாட்டு வைபவத்துக்காக அமைச்சர் யாழ்ப்பாணம் நாகவிகாரைக்குச் செல்லுதல்.

10. 00 மணி: யாழ். அரசாங்க செயலகத்தில் கிராம சபைத் தலைவர்களது சமாஜத்தின் மகா நாட்டில் கலந்து கொள்ளுதல்.

நண்பகல் 12. 30 மணி: நேர்முக உரையாடலுக்கு அழைக்கப்பட்ட தூதுக் குழுக்களைச் சந்தித்தல்.

பி. ப. 4. 00 மணி: யாழ்ப்பாண மாநகர சபையின் பாஷையூர் சனசமூக



நிலையத்திற்குச் செல்லல்.

பி. ப. 4. 30 மணி; யாழ்ப்பாண மாநகரசபையால் அளிக்கப்படும், வரவேற்பும் தேநீர் விருந்தும்.

பி. ப. 5. 30 மணி: யாழ். பொது ஜன நூலக மேல்மாடியில் உள்ள கலைக்கூடத்தை மாநகர முதல்வர் திரு. சி. நாகராஜா தலைமையில் அமைச்சர் திறந்து வைத்தல்.

பி. ப. 6. 00 மணி: யாழ்ப்பாணம் திறந்த வெளியரங்கில் நடைபெறும் யாழ். மாவட்ட ஜன சமூக நிலையங்களின் மகாநாட்டு கலை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளுதல். (கா. நி)

---

## தீவுப்பகுதியில் சுதந்திரதினம்

அல்லைப்பிட்டி, செவ்.

இம்முறை சுதந்திரதினத்தைதீவுப்பகுதியில் கோலாகலமாக கொண்டாடப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் நடைபெற இருக்கும் இவ் விழாவில் பலகலை நிகழ்ச்சிகளும் சைக்கிள் ஓட்டப்போட்டி, படகோட்டப்போட்டி, மாட்டுவண்டிப்போட்டி என்பன நடைபெற இருக்கிறது.

## பரீட்சைக்கு தோற்றினர்

அல்லைப்பிட்டி, செவ்.

யாழ்ப்பாணம் இலங்கை ஆயுள் வேத வைத்தியக் கல்லூரியைச் சேர்ந்த சுமார் 25-க்கு மேற்பட்ட மாணவிகள் முதலுதவிப் பரீட்சைக்குத் தோற்றினர். இாக்களது பாடங்களை யாழ்ப்பாணம் செண். ஜோன்ஸ் குழுவினர்கள் நடாத்திவந்தனர். இறுதிப்பரீட்சைகளை யாழ். அரசினர் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த டாக்டர்கள் நடாத்தியது குறிப்பிடத்தக்கது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘புரட்சிநடிகர்’ ஏன்கோவிலுக்கு போவதில்லை?

## அவர் வாழ்வில் நடந்த கசப்பான சம்பவம்

### எம். ஜி. ஆரே கூறுகிறார்

நான் ஒரு நாஸ்திகனா?

இல்லவே இல்லை.

என்னைப் பலர் தவறாகப் புரிந்து கொண்டு தவறாகவும் எழுதி வருகிறார்கள். உண்மையாக நான் ஒரு நாஸ்திகன் அல்ல. எனக்கு கடவுள் நம்பிக்கை உண்டு. ஒருவனே தேவன் என்ற கொள்கையை உடையவன் நான்.

நம் சக்தியை எல்லாம் மீறிய ஒரு பெரிய சக்தி இருக்கிறது. அதைத்தான் கடவுள் என்று சொல்கிறோம். வழிபடுகிறோம. பலர் இந்தச் சக்திக்குப் பல உருவம்கொடுத்துபெயர்கள்பல தந்து கடவுளாக வணங்கி வழிபடுகிறார்கள். நான் என் தாயின் உருவத்தில் அந்தச் சக்தியை இப்போது வழிபட்டு வருகிறேன்.

அப்படியானால் நான் கோவிலுக்குப் போனது கிடையாதா?

போயிருக்கிறேன். அங்கிருந்த தெய்வங்களைவணங்கியும் இருக்கிறேன்.

‘மர்மயோகி’ படம் கோவை சென்ரல் ஸ்ருடியோவில் தயாராகிவந்த சமயம் நான் பழனிமலைக்குப் போய் முருகனைத் தரிசித்து இருக்கிறேன். அப்போது நான் மட்டும் தனியே போகவில்லை. என்னுடன் என் நண்பர் நம்பியாரும் வந்திருந்தார், அவரது மூத்தமகளை நான் என் தோளிலே தூக்கி வைத்துக் கொண்டு மலைக்குச் சென்றேன். அந்தக் குழந்தைக்கு அன்று நானே பெயரும் சூட்டினேன்.

ஒருசமயம் ஏழுமலையானைத் தரிசிக்க கால்நடையாகவேதிருப்பதி மலைக்குச் சென்று அவரையும்வணங்கி இருக்கிறேன். இரண்டாவது முறையாக நான் இதே திருப்பதிக்குச் சென்ற போதுதான் என் உள்ளத்தில் பெரிய மாறுதல் ஏற்பட்டது.

அப்படிப்பட்ட சம்பவம் ஒன்று அங்கே நடந்தது. நான் நண்பர்கள் சிலருடன் வாடகைக்காரில் திருப்பதிக்குச் சென்றிருந்தேன்.

வெங்கடாசலபதியை தரிசிக்க ஏராளமான பக்தர்கள் தர்மதரிசன வரிசையில் நின்று கொண்டிருந்தார்கள். பல மைல்கள் நடந்து வந்த களைப்பும் நீண்டநேரம் தரிசனத்திற்காகக் காத்திருக்கும் பொறுமை உணர்வும் அவர்

(5-ம் பக்கம் பார்க்க



# ‘கலைவாணர் குழு’வின்

# வில்லிசை ஒலிக்கப்போகிறது!



வில்லிசையின் நாதத்தை ஈழமெங்கும் ஒலிக்க வைக்கப் போகிறார்கள், கலைவாணர் வில்லிசைக் குழுவினர்!

இவர்களின் முதலாவது வில்லுப்பாட்டு நிகழ்ச்சி தைப்பூசத்தன்று (2-2-67ல்) தெய்வ சந்நிதானத்தில் அரங்கேறுகிறது.

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய முன்றலில் ‘வள்ளிதிருமணம்’ என்ற வில்லிசைக் கச்சேரியை உடுப்பிட்டி எம். பி. யும், உபசபாநாயகருமான திரு. எம். சிவசிதம்பரம், பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம், பண்டிதர் பொன். கிருஷ்ணபிள்ளை ஆகியோர் முன்னிலையில் நடாத்தவிருக்கின்றனர், கலைவாணர் வில்லிசைக் குழுவினர்.

நகைச்சுவை அரசர் கலைவாணர் பெயரை தமது குழுவுக்குக் கொண்டுள்ள இந்த வில்லிசைக் கோஷ்டியில் அங்கம் வகிப்பவர்கள் அனுபவமும், ஆற்றலும் திறமையுமிக்க தரமான கலைஞர்கள்.

வில்லிசையை சோடைபோகவிடாமல் ஈழமெங்கும் நடாத்தி வெற்றி கண்ட திருப்பூங்குடி வி. கே. ஆறுமுகம் அவர்களின் பிரதம சிஷ்யர்களில் ஒருவரான நாடறிந்த நல்ல கலைஞர் கே. என். கணபதிப்பிள்ளை வில்லிசைக்கிறார்! ஈழத்து கலையுலகம் இவரை நன்கறியும். வண்ணை கலைவாணர் நாடகமன்றத்தின்மூலம் புதுமை பல செய்து நல்ல நடிகரென்றும் நல்ல டைரக்டர் என்றும் பெயர் பெற்றவர். கலைவாணரைப் போல் ஈழத்தில் நகைச்சுவைக்கு தனக்கென்றோர் தனிப்பாணியை வைத்திருக்கிறார். கலைவாணர் வில்லிசைக் குழுவில் வில்லிசைக்க மிகவும்

(5-ம் பக்கம் பார்க்க)

# கலைமலர்

# மகனின் நடிப்பைப் பார்த்துக்கொண்டிருந்த தாய் அலறினாள்!

லண்டன் மாநகரில் நாடகமொன்றில் ஒரு காட்சியில் ஆடையின்றி காதலர் இருவர் தகாத உறவில் லயித்துக் கொண்டிருப்பது போன்று நடிப்பில் சித்தரித்துக் காட்டிக்கொண்டிருந்த மகனைக் கண்டு விட்டு ஒரு தாய் அலறினாள்!

“உன்னுடைய உடையை உடுத்திக்கொண்டு நடி. என்னால் இதைச் சகிக்கமுடியவில்லை” என்று அவள் போட்ட கூப்பாடு நாடகம் பார்த்துக்கொண்டிருந்தவர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

60 வயது கொண்ட அந்தத்தாய், தன் மகன் லூயிஸ் நீஜினின் நடிப்பைப்பார்ப்பதற்கென்றே கனடாவிலிருந்து வந்திருந்தார்.

230 வருடகாலம் பழமை பெற்ற இங்கிலாந்து நாட்டின் தணிக்கைமுறை கடந்த செப்டம்பரில் ‘நீக்கப்பட்டதற்குப் பிறகு இப்படியான நாடகங்கள் லண்டனை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன வெனத் தெரியவருகிறது.

—‘எம்’

## நாகேஷ் பதில்கள்!

கே: மனிதன் எப்போது உண்மையாக அழுகிறான்?

ப: **பக்கத்து வீட்டுக்காரனுக்கு லட்சம் ரூபாய் பரிசு விழும் போது!**

கே: நடிப்பிலே சிறந்த நடிப்பு எது?

ப: **தேர்தல் மேடையில் காணலாம்.**

கே: மனிதன் மனிதனாக வாழ என்ன செய்ய வேண்டும்?

ப: **மனுஷிகள் மனுஷிகளாக வாழவேண்டும்!**

கே. நடிகை எப்போது தான் ஒரு இந்திய நாட்டு பெண்ணென்பதை உணருகிறாள்?

ப: **கிழவியான பிறகு.**

நன்றி: பொம்மை

# சின்ன செய்திகள்!

## ஆனால் சுவையானவை

கதாசிரியர், டைரக்டர், கே. எஸ். கோபாலகிருஷ்ணன் சொந்தத்தில் தயாரிக்கப்போகும் வர்ணப் படத்தில் எம். ஜி. ஆர். நடிக்கப் போகிறார். தவிர, வள்ளி பிலிம்ஸ் தயாரிக்கப் போகும் அடுத்த படத்திற்கும் இவர் கதை, வசனம் எழுதுகிறார். இதிலும் எம். ஜி. ஆர். நடிக்கிறார்.

0 0 0

ஏஎல். எஸ். புரொடக்ஷன்சார், ஒரு ஹிந்திப் படத்தைத் தழுவி தமிழில் தயாரிக்கப்போகும் வர்ணப் படத்தில் எம். ஜி. ஆர் நடிக்கிறார். இந்தப் படத்தை பீம்சிங் டைரக்ட செய்யப் போகிறார். எம். ஜி. ஆருடன் இதில் சரோஜாதேவி, பத்மினி இருவரும் நடிப்பார்கள். சாரதா ஸ்டுடியோவில் ஜனவரியில் இதன் படப்பிடிப்பு அரம்பமாகும்.

0 0 0

ஜெமினியில் அடுத்து வளரவிருக்கும் வர்ணப் படமொன்றில் சிவாஜி கணேசன் நடிக்கப் போகிறார். கொத்தமங்கலம் சுப்பு இதன் கதையை எழுதுகிறார். ஏ. பி. நாகராஜன் இந்தப் படத்தை டைரக்ட் செய்ய ஒப்பந்தமாகி இருக்கிறார். பத்மினி, சௌகார் ஜானகி இதில் நடிக்கிறார்கள்.

0 0 0

‘சோப்பு, சீப்பு, கண்ணாடி’ படத்தை தயாரித்த கார்த்திகேயா பிலிம்ஸாரின் அடுத்த படத்தில் எம். ஜி. ஆர். நடிக்கிறார்.

1967-ன் ஜனாதிபதியின் பரிசு பெற்ற இரட்டையர்களான திருமலை-மகாலிங்கம் இப்படத்தை டைரக்ட் செய்வார்கள்.

0 0 0

‘குழந்தைக்காக’ படத்தை வெளியிட்ட விஜயா சுரேஷ் கம்பைன்ஸ், அடுத்த தயாரிப்பிலும் இறங்கிவிட்டது.

ஜெமினி கணேசனும், கே. ஆர். விஜயாவும் நீண்ட இடைவெளிக்குப்பின் மீண்டும் இணைந்து இதில் நடிக்கிறார்கள். ‘மேஜர்’ சுந்தரராஜன், மனோகர் ஆகியோரும் இதில் நடிக்கிறார்கள்.

# படவுலகில்

சந்திரகாந்தா வீட்டில் ‘துளசி’ ‘துளசி’ என்று ஒரு பெயர் கூப்பிட்டால் யாரோ ஒரு குழந்தையென எண்ணிவிடக் கூடாது. அது அவர் வளர்க்கும் நாயின் பெயர்.

0 பாட்டு எழுத இன்னும் ரங்கராஜன் வரவில்லையா என்று யாராவது கேட்டால், யாரோ ஒரு புதுக்கவிஞர் என்று அர்த்தமல்ல. வாலியின் சொந்தப்பெயர் அது.

0 நடிகர் சிவகுமார்போல் ஓரளவுக்கு ஓவியப் பயிற்சி உடையவர்கள் ஜெயலலிதாவும், ஷீலாவும்.

0 நடிகை கே. ஆர. விஜயாவுக்கு மதுரையில் ஓர் ரசிகர் மன்றம் இருக்கிறது.

0 ‘பாலாஜி கம்பைன்ஸ்’ என்ற படக்கம்பெனி நடிகர் பாலாஜிக்குச் சொந்தமானது என்று சொன்னால் அது பிழை.

0 முன்பு ஒரு காலத்தில் வெளிவந்த ‘கிஸ்மத்’ என்ற ஹிந்திப்படம் கல்கத்தா நகரத்தில் மூன்று வருடங்கள் தொடர்பாக காட்டப்பட்டது.

— ஈழத்து நவீனன்

# பல்சுவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவீன முறையில்

கோப்பாய், செவ்

கோப்பாய் சந்தி முதல் கல்வியங்காடு சந்தி வரை பஸ்தரிப்பு நிலையங்கள் நவீனமுறையில் அமைக்கப்படும். இதற்கான நிதியுதவியை இப்பகுதிப் பிரமுகர்கள் வழங்க முன்வந்துள்ளனர்.

## கும்பாபிஷேகம்

உடுப்பிட்டி, செவ்.

கரணவாய் வடக்கு நவிண்டில் மாப்பாண கடவைபூத விநாயகர் ஆலயக் கும்பாபிஷேகம் அடுத்த மாதம் 7-ம் திகதி நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

பம்பலப்பிட்டி, செவ்.

இலங்கைத் தேயிலையை வாங்குவதற்கு பாகிஸ்தான் அரசாங்கம் ஒப்புக்கொண்டிருக்கிறது. சுமார் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான தேயிலையை அது வாங்கும். இதற்குப்பதிலாக பாகிஸ்தானிடமிருந்து இலங்கை அரிசியைப் பெற்றுக்கொள்ளும்.

மகாஜனவுடன்நடந்த விறுவிறுப்பான கிரிக்கெட் ஆட்டம்

# ஹாட்லி கல்லூரியின் அபாரதுடுப்பாட்டம்

### ஸ்ரீதரன் 'செஞ்சரி' அடித்தார்

யாழ்ப்பாணம், புதன்

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிககும், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கும் இடையில் மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் ஹாட்லிக்கல்லூரி இன்னிங்ஸாலும் 161 ஓட்டங்களாலும் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஹாட்லிக்கல்லூரி 6 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 316 ஓட்டங்களைப் பெற்று ஆட்டததை நிறுத்திக்கொண்டது. இக்கல்லூரியின் காப்டன் ஸ்ரீதரன் 110 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். இலங்கையின் சகல பாகங்களிலும் கல்லூரிகளிடையே நடைபெற்று வரும் கிரிக்கெட் போட்டிகளில் இதுவரை முதல் ''செஞ்சரி'' அடித்த பெருமை ஸ்ரீதரனையே சேரும். ஹாட்லிக் கல்லூரியின் மற்றைய வீரர்களான டி. கே. வுவல், வி. சத்தியசீலன், சே. தவக்குமார் ஆகியோர் முறையே 90, 36, 35 ஓட்டங்களை விளாசித்தள்ளினர்.

மகாஜனக்கல்லூரியின் பந்தெறி வீரர்களான ராஜகாந்தன் 49 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டையும், விஜயகாந்தன் 42 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

மகாஜனக்கல்லூரி 1-வது இன்னிங்ஸில் மொத்தம் 36 ஓட்டங்களையே பெற்றது. இதில் ஜெயக்குமார் 16 ஓட்டங்களையும், ராஜகாந்தன் 13 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஹாட்லிக்கல்லூரி பந்தெறி வீரர்களான புவனேஸ்வரன் 8 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுகளையும், செல்வனந்தராஜா 7 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

மகாஜனக்கல்லூரி 2-வது இன்னிங்ஸில் மொத்தம் 119 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கந்தராசா 44 ஓட்டங்களையும், ராஜகாந்தன் 25 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஹாட்லிக்கல்லூரி பந்தெறி வீரர்களான முத்துக்குமார், வுவல், புவனேஸ்வரன், செல்வனந்தராஜா ஆகியோர் முறையே 2, 2, 3, 2, விக்கெட்டுகளை வீழ்த்தினர். (தே. நி.)


இப்பொழுது!


குரோமோ

உரம்

112 இரு. பைகளில்

கிடைக்கிறது

விவசாய உத்தரவாத அடையாளம்



கீழ்க்காணும் பயிர்களுக்கு உகந்தது.

இலை வகைகள், தாழ்நத பூமிக் காய்கறிகள், பயறு, அவரை வகைகள், மிளகாய், தக்காளி

கிழங்குப் பயிர்கள், உருளைக் கிழங்கு, வெங்காயம், பழ மரங்கள், நாரத்தை வகைகள்

வாழை, அன்னாசி, பொதுப் பூவினங்கள், ரோஜா பூவினங்கள்

அந்தூரியம், பெகோனியா, புல் முற்றம், வெற்றிலை, புகையிலை, விசேஷ சிகரெட் புகையிலை

தென்னை, கோப்பி, கொக்கோ, நெல், விசேஷ நெற்கலவை

இலங்கை முழுதுமுள்ள ஷெல் ரசாயனப் பொருட் கையிருப்பாளர் எல்லோரிடமும் 112 இரு. பைகளிலும் 5 இரு. பைகளிலும் விற்பனையாகின்றன.

QUALITY GUARANTEED BY SHELL SCIENCE

SHELL

குரோமோ உரம் உபயோகித்து

GRO-MORE அதிக உணவு பயிரிடுக.



எப்பயிர்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை

அப்பயிர்க்கு 'ஷெல்' பூச்சி நாசினி பயனை பாவிக்காரெனில்.

AGENTS

ரேயல் டிஸ்பென்ஸறி

PHONE 397 JAFFNA.


## எம.சி.சி. கோஷ்டி வென்றது

கொழும்பு, செவ்.

கொழும்பு ஓவல் மைதானத்தில் எம். சி. சி. கோஷ்டிக்கும் இலங்கைக் கோஷ்டிக்குமிடையே இன்றுநடைபெற்ற கிரிக்கெட் முடிவு விபரம்:-

எம். சி. சி. கோஷ்டி 5-192
இலங்கைக்கோஷ்டி 174

## சரவணை மக்களின் கஷ்டம

அல்லைப்பிட்டி, செவ்.

கடந்த பல வருடங்களாக இயங்கி வரும் சரவணை உபதபால் நிலையத்திற்கு இன்னும் தொலைபேசி வசதி செய்து கொடுக்கப் படவில்லை. அண்மைக் காலங்களில் ஆரம்பிக்கப்பட்ட பல உபதபால் நிலையங்களுக்கு தொலை பேசி வசதி கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## சுதந்திரதினவிழா

சங்கானை, செவ்.

வலிகாமம் மேற்கு காரியாதிகாரி பிரிவு சுதந்திர தின விழா அடுத்தமாதம் 4-ம் தேதி காலை தேசிய கொடி ஏற்று வைபவத்துடன் ஆரம்பமாகும். அன்று சயிக்கிள் ஓட்டப் போட்டி, கரபந்தாட்டப் போட்டி, உதை பந்தாட்டப் போட்டி ஆகியன நடைபெறும் இதற்கான நடவடிக்கைகளை சுதந்திர தின விழா செயற்குழு மேற் கொண்டுள்ளது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பட்டம் பெற்றவர் செய்த முடிவு

சங்கானை, செவ்.

பட்டதாரி வாலிபர் ஒருவர் நச்சுத்திராவகம் அருந்தி மரணமான பரிதாப சம்பவம் இளவாலை மாரீசன் கூடலில் நடைபெற்றது.

படித்துப்பட்டம் பெற்ற பட்டதாரியாகிய என். தியாகராசா என்னும் இவ்வாலிபர் பலகாலமாக வேலையில்லாத் திண்டாட்டத்திற்குள்ளாகி சிலகாலம் சித்த சுவாதீனமுற்று இருந்தார் எனவும் வாழ்க்கையில் வெறுப்பு ஏற்பட்டதால் நச்சுத்திராவகம் அருந்தினார் எனவும் பொலிசார் நடத்திய விசாரணையில் தெரிய வந்தது. இரவு வீட்டிலுள்ளவர்கள் நித்திரைக்குச் செல்லும் சமயம் பார்த்து வீட்டின் பின்புறத்திற்குச் சென்று நச்சுத்திராவகம் குடித்துவிட்டு தனது சகோதரர் அருணாசலத்திற்கு தான் நஞ்சு அருந்தியதாகக் கூறினாராம்.

மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றும் உயிரைக் காப்பாற்ற முடியாது போய்விட்டதாக மரணவிசாரணையில் தெரிய வந்தது. இறந்தவரின் தாயார் பார்வதி, சகோதரர் அருணாசலம் ஆகியோர் வாக்குமூலம் அளித்தனர். மரண விசாரணை அதிகாரி திரு. கே. சேனாதிராசா விசாரணை முடிவில் நச்சுத்திராவகம் அருந்தியதால் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

# நெடுந்தீவில் இராணுவ முகாம்

யாழ்ப்பாணம், புதன்

நெடுந்தீவில் இவ்வருடம் ஏப்ரல் மாதத்துக்குள் ஓர் இராணுவமுகாம் நிறுவப்படலாம் எனத் தெரியவந்துள்ளது. இது நிறுவப்பட்டால் யாழ்ப்பாணக் குடாநாட்டில் அமைக்கப்படும் நான்காவது இராணுவமுகாமாக இது இருக்கும்.

வடபகுதிக் கள்ளக்கடத்தல் பிரதேசங்களில் நெடுந்தீவு கேந்திர ஸ்தானமாக இருப்பதாக பாதுகாப்பு இலாகா அதிகாரிகள் சிலர் கருத்து வெளியிட்டுள்ளதே இதற்குக் காரணம் என அறியப்படுகின்றது.

மனித நடமாட்டம் குறைவாகவுள்ள நெடுந்தீவுப் பகுதியால், கச்சதீவை மையமாக வைத்து கள்ளக் கடத்தல் நடைபெறுவதாக எடுக்கப்பட்ட கணக்கெடுப்பு சரியாக இருப்பதாலேயே இங்கு முப்படைகளின் பாதுகாப்பையும் அதிகரிக்க சம்பந்தப்பட்ட இலாகா முடிவு செய்துள்ளதாக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நெடுந்தீவில் இராணுவ முகாம் அமைக்க சரியான ஓர் இடம் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளதாகவும், ஏப்ரல் மாதத்திற்கு முன்னரே இது நிறுவப்படுமென்றும் கூறப்படுகின்றது.

அத்துடன் நெடுந்தீவு கடற்பிரதேசத்தில் கடற்படையினரின் ரோந்து நடவடிக்கையை அதிகரிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. நெடுந்தீவில்பொலிஸ்நிலையமொன்றும் இம்மாதம் முதலாம் திகதியே அமைக்கப்பட்டதென்பதும் குறிப்பிடத்தக்கது. (கா. நி)

# 'ஐயோ என பெண்கள் குழறும் சத்தம் கேட்டது'

## கொலை வழக்கில் சாட்சியம்

குரும்பசிட்டி, செவ்.

ஊரங்குணை கொலை வழக்கின் மூன்றாவது எதிரி எஸ். பொன்னம்பலத்தை மல்லாகம் நீதிபதி திரு. எம். சண்முகலிங்கம் ரூபா 1000 பிணையில் செல்ல அனுமதியளித்தார். மற்றைய இரு எதிரிகளையும் தொடர்ந்து றிமாண்டில் வைக்க நீதிபதி உத்தரவிட்டு வழக்கு மேல் விசாரணையை அடுத்த மாதம் 7ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இவ் வழக்கு திங்கட்கிழமை தொடர்ந்து விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது இராமலிங்கம் பொன்னையா என்பவர் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

சம்பவதினம் மாலை 5மணியளவில் புதுவளவு ஒழுங்கையால் ஆடுகளுக்கு குழை வெட்ட எனது காணிக்குச் சென்று கொண்டிருந்தேன். போகும்போது ஐயோ என பெண்கள் இருவர் குளறும் சத்தம் கேட்டது. இதைத் தொடர்ந்து இரண்டாம் எதிரியும் இறந்தவரும் கைகளால் சண்டையிட்டுக் கொண்டிருப்பதைக் கண்டேன். இந்நேரம் காலஞ்சென்றவருக்கு பின்புறமாக கையில் இரும்புக்கம்பியுடன் ஓடிவந்த 2ம் எதிரி இறந்தவரின் தலையில் தாக்கினார். தாக்குதல் விழுந்ததும் காலஞ்சென்றவர் நிலத்தில் விழுந்தார். 3ம் எதிரி இறந்தவரின் ஆபத்தான இடத்தை தாக்கினார். 1ம் எதிரி விழுந்திருந்த இறந்தவருக்கு மேலும் இரு தடவை இரும்புக்கம்பியால் அடித்தார். பின்னர் எதிரிகள் தமது வீடுநோக்கி ஓடி விட்டனர். காலஞ்சென்றவருக்கருகில் அன்னலட்சுமி, சின்னாச்சி ஆகியோர் குளறிக் கொண்டு நின்றதைக் கண்டேன்.''

தம்பு சின்னாச்சி, தம்பு பொன்னையா ஆகியோரும் சாட்சியமளித்தனர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்தார்.

ஊரங்குணையைச் சேர்ந்த தம்பு நல்லையா அல்லது விநாசித்தம்பி என்பவரைக் கடந்த வருடம் டிசம்பர் மாதம் 22ந் திகதி கொலை செய்ததாக சுன்னாகம் பொலிசார் எஸ். கனகலிங்கம், எஸ். சுப்பையா, எஸ். பொன்னம்பலம் ஆகியோர் மூவருக் கெதிராக இவ் வழக்கைத் தொடர்ந்துள்ளனர்.


## தேவை

ஈழநாடு பிந்திய பதிப்பு விற்பனை செய்வதற்கு பையன்கள் உடனடியாகத்தேவை. படித்த இளைஞர்கள் தங்கள் ஓய்வான நேரத்தில் சுலபமாகப் பணம் சேகரித்துக் கொள்ளலாம். தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.

விபரங்கட்கு,
விநியோக மனேஜர்,
'ஈழநாடு'
யாழ்ப்பாணம்.

1169


# சைக்கிளைக் குறுக்கே வீசி கார்ச் சாரதிமீது வாள்வெட்டு

## ஆபத்தான நிலையில் கார்ச் சாரதி: பொலிஸ் பாதுகாப்பில் இருவர்

யாழ்ப்பாணம், புதன்

நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் நாச்சிமார் கோவிலடிச் சந்திக்கருகில் நடந்த ஒரு சம்பவத்தில் மோட்டார் கார் சாரதி ஒருவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் படுகாயங்களுடன் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்ட மற்றொருவரும் ஆஸ்பத்திரியில் காயங்களுடன் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

ஒரு மோட்டார்கராஜைச் சேர்ந்த ஒருவர் அங்குபழுது பார்க்க வந்த ஒரு காரைத் திருத்திவிட்டு அது சரியாக ஓடுகிறதா என்பதைப்பார்ப்பதற்காக அந்தக் காரைச் செலுத்திச் சென்றதாகவும் அச்சமயத்தில் அவரது காருக்கு குறுக்கே சிலர் சைக்கிள் ஒன்றைத்தள்ளி காரை நிறுத்தி காரைச் செலுத்திச் சென்றவரை வாளால் வெட்டிக் காயப்படுத்தியதாகவும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

படுகாயங்களுக்குள்ளான கார்ச்சாரதி தனபாலசிங்கம் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகிறார். இச்சம்பவத்தில் காயமடைந்தவில்வராசா, தர்மன் ஆகிய இருவரும் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களிருவரும் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர். பொலிசார் தொடர்ந்து புலன்விசாரணை செய்துவருகின்றனர்.

### டாக்டர் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டைகின்றார். தொலைபேசிச் செய்திகளை இங்கு கடமையாற்றும் டாக்டரிடம்சொல்வதற்குக்கூட இது காலவரை எவரும் நியமிக்கப் படவில்லை.

### மூவரும் பிணையில்

குரும்பசிட்டி, செவ்.

சட்ட விரோத ஊர்வல வழக்கின் எதிரிகள் மூவரும் மீண்டும் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜராகிய போது நீதிபதி திரு. எம். சண்முகலிங்கம் தலா 500 ரூபா பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டார்.

எதிரிகள் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. ஏ அன்ரனி எதிரிகள் மீது விதிக்கப்பட்டுள்ள தீர்ப்பைஆட்சேபித்து அப்பீல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்ததைத்தொடர்ந்து பிணையில் செல்ல அனுமதி வழங்கப்பட்டது.

சட்ட விரோத ஊர்வலம் நடாத்தியது, அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் வகையில் சுலோகம் கோஷித்தமை என்ற இரு குற்றச்சாட்டில் 1ம், 2ம், எதிரிகளுக்கு தலா 350 ரூபாவும், 3ம், எதிரிக்கு 250 ரூபாம்டி அபராதம் விதிக்கப்பவுட்ருந்தது.

4-வது டெஸ்ட்

### மே. இந்தியா 9—614

அடிலேட், ஜன. 28

அடிலேட்டில் நடைபெறும் 4-வது டெஸ்ட் போட்டியின் 4-வது நாளான இன்று மேற். இந்தியக் கிரிக்கெட் கோஷ்டி மிகவேகமாகத் துடுப்பெடுத்தாடி, இன்றைய ஆட்டம் முடிவடையும் போது 9 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 614 ஓட்டங்களை விளாசித் தள்ளினர். இதில், புச்சர் 118 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். ஹொல்போட் ஆட்டமிழக்காமல் 80 ஓட்டங்களைப் பெற்றார். கடைசியாக ஆட்டமிழந்த ஹென்றிச் 36 ஓட்டங்களைப் பெற்றார்.

மேற். இந்தியக் கோஷ்டி தற்போதைய நிலையில் 357 அதிகப்பயான ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இவர்களின் முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் 276.

ஆஸ்திரேலியா 1-வது இன்னிங்ஸ் ஸ்கோர் 533.

# போயா நாட்களில் கூட்டுதொழிலாளருக்கு ஓய்வு

யாழ்ப்பாணம், புதன்

போயா நாட்களிலும், பொதுவிடுமுறை நாட்களிலும் நகரசபைக் கூட்டுத் தொழிலாளர்களுக்கு ஓய்வு நாளாக இருக்கவேண்டும்.

இவ்வாறு ஒரு தீர்மானம் யாழ்ப்பாணம் மாநகரசபையின் முதலாவது சுகாதாரக் குழுக்கூட்டத்தில் உதவி மேயர் திரு. ஆ. துரைராசசிங்கத்தினால் கொண்டுவரப்பட்டு நிறைவேறியது

இக்கூட்டத்தில், யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திற்கு முன்னாலுள்ள மலகூடத்தை நவீன முறையில் அமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும், புதிய பஸ்நிலையத்தில் ஒருசலகூடம் நிறுவவேண்டுமெனவும் கொண்டுவந்த தீர்மானம் நிறைவேறியது.

சுகாதாரக்குழுத் தலைவராக திரு. கே. வி. தெய்வேந்திரம் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். (ந. நி.)

### மேயரும் . .

1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாறு உள்ளூராட்சிஅமைச்சரிடம் முதலாவது கோரிக்கையாக இவர்கள் கேட்பர்.

மற்றைய கோரிக்கைகள் விபரம் வருமாறு:

யாழ்ப்பாண நகருக்கு விஜயம் செய்பவர்கள் தொகைஅதிகரித்துக்கொண்டிருப்பதால் நகர மத்தியில் நவீன வசதிகள் கொண்ட புதிய வாடி வீடு ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுத்தல்.

மாநகரசபைக்கு சொந்தமாக புதிய நகரமண்டபம் ஒன்றை புதிய அமைப்பில் நிறுவ முயற்சிகள் எடுத்தல்; நவீனமார்க்கட் கட்டட வேலைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்தல்.

குடிநீர்த்திட்ட இரண்டாவது திட்டம், விடமைப்புத் திட்டம் ஆகியவற்றிற்கான முயற்சிகளை மேற்கொள்வது. (கா. நி)

### அண்ணா...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாகவும் இரத்த அழுத்தம் ஏற்பட்டதாகவும் பின்னர் அவரது உடல்நிலை சீராகியதாகவும் வைத்தியஅறிக்கை தெரிவித்தது.

அடையாறு புற்றுநோய் ஆராய்ச்சிக் கழக ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்குப்பின் உடல்நிலை தேறிவரும் திரு. அண்ணாதுரை இன்னும் தீவிர கவனிப்பு நிலையிலிருந்துவருகிறார்.

குணமடைந்ததும் அமெரிக்காவுக்கு வந்து சிலவாரங்கள் தங்கி ஓய்வெடுக்குமாறு அமெரிக்க சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் மில்லர் அண்ணாவுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.


## தேவை

திறமையுள்ள பெயின்ரர் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும், விபரங்கட்கு நேரில் சந்திக்கவும், ஆ. திருநாவுக்கரசு, அரசு மோட்டோ வேக்ஸ், ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 641


## காணவில்லை

நமசிவாயம் சுவாமிநாதன் 26-1-69ல் 2 மணிக்குப் பின் காணவில்லை. வயது 55. 5 அடி உயரம், மொட்டம் தலை, நரை மயிர், மெல்லியவர். உடை பச்சைக்கரை வேட்டி, சிவப்புத் துவாய், மேல் சட்டை இல்லை. வலது காலில் புண் உண்டு. துணி சுத்தியிருப்பார். தகவல் தெரிந்தவர்கள் அண்மையிலுள்ள பொலிஸ் நிலையத்தில் அல்லது நேரடியாக அறிவிக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். செ. குணரத்தினம், இல. 40, 2-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். 639

## மரண அறிவித்தல்

அருணாசலம் மாணிக்க தியாகராசா, காலம் சென்ற சிதம்பரப்பிள்ளையின் அன்புக்கணவரும், இளைப்பாறிய ஆசிரியர் சங்கரப்பிள்ளை, காலம்சென்ற நிலஅளவையாளர் சதாசிவம், இளைப்பாறிய படம்வரை வல்லுனர் இராஜகேஸ்சரி, இணுவில் சைவப்பிரகாசவித்தியாசாலை ஆசிரியர் திருமதி வேலுப்பிள்ளை, கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியர் ஆனந்தர் ஆகியோரின் தந்தை காலமாகிவிட்டார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று காலை 11 மணியளவில் பூவோடையானத்தில் நடைபெறும். உறவினரும், நண்பரும் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

782 ச. ஜெகநாதன்

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு ஜனவரி மாதம் 29-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org